# ஞானஸ்நானம்

## வேதாகம விளக்கவுரை

Galilee
MINISTRIES

*Growth In Chirst*

REV. J. TITUS B.A., B.TH. M.DIV.,

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# ஞானஸ்நானம்

[விளக்க உரை கையேடு]

லூக்-7:30 ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக்
கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையை தள்ளிவிட்டார்கள்.

ஆசிரியர்

**J.டைட்டஸ்** B.A.,B.Th.,M.Div

ஞானஸ்நானம்

முதற் பதிப்பு - 2016 ஆகஸ்ட், 2000 பிரதிகள்

உரிமை ஆசிரியருக்கே

Rejoy Publications, Sivakasi.

தொகுப்பாசிரியர்

Mrs. மெர்லின் டைட்டஸ்

D.H.A., D.T.Ed., D.Th.,

எல்லா முன்னணி கிறிஸ்தவ
புத்தக விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

Govt. of India Reg. No. 1065/2011

**கலிலேயா ஊழியங்கள்**

**Rev.J.டைட்டஸ் B.A., B.Th., M.Div**

**பெதஸ்தா தேவாலயம்**

9/536A, நேருஜி நகர், ரிசர்வ் லைன்,

சிவகாசி. விருதுநகர் மாவட்டம்.

Cell : 98423 95975, 94435 73691, 94435 73698

# அறிமுகவுரை

ஞானஸ்நான உபதேசத்தை குறித்த பல கருத்து வேறுபாடுகள் உலகில் இருந்தாலும் ஞானஸ்நானம் கொடுக்கும் முறை, ஞானஸ்நானத்தின் விதி முறைகள், ஞானஸ்நானம் பெறுவதின் நோக்கம் முதலியவற்றைக் குறித்து கிறிஸ்தவ சபைகள் விளங்கி கொள்ளவே இல்லை. ஆதி நூற்றாண்டின் அப்போஸ்தலர் மூலம் போதிக்கப்பட்ட சரியான ஞனாஸ்நானத்தை அவை இன்னும் விளங்கி கொள்ளாமலேயே இருந்து வருகின்றன. எனவே ஞானஸ்நானத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய உண்மையான ஆசீர்வாதங்களையும், வல்லமையையும் உணர்ந்து கொள்ளவில்லை.

இப்புத்தகத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும் முறை ஞானஸ்நானத்தின் விதிமுறைகள் ஆதி நூற்றாண்டிலிருந்து கொடுக்கப்பட்டு வந்த ஞானஸ்நானம் ஆகியவற்றைப் பற்றிய சத்தியங்கள் மட்டுமின்றி, பரிசுத்தாவியின் மூலம் வழி நடத்தப்பட்டு ஒரு ஜெபஜீவியம் செய்யவும், மனமாற வாஞ்சிக்கிறவர்களுக்கு ஞானஸ்நானம் நல்ல ஆசீர்வாதமும், அவருடைய வல்லமையையும் பெற்றுக் கொள்ள உதவியாக வேத வசனத்தை கொண்டு விவரிக்கப்பட்டுள்ளன.

கிறிஸ்துவின் பணியில்...

Mrs. மெர்லின் டைட்டஸ்

D.H.A., D.T.Ed., D.Th.,

## ஆசிரியர் உரை...

அன்பு சகோதர சகோதரிகளே இயேசுவின் உன்னத அன்பினால் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

ஞானஸ்நானத்தை குறித்து பல வேத வல்லுநர்கள். தேவ ஆவியின் பெலத்தோடு அநேக கருத்துகளை, வேதவசனங்களை கொண்டு எழுதியிருப்பதை நீங்கள் வாசித்திருப்பீர்கள். அதே போல் தேவன் கொடுத்த ஞானத்தில் சற்று ஆழமாய் ஞானஸ்நானத்தை குறித்து ஆராய்ந்து புதிய ஏற்பாட்டு ஞானஸ்தானம், குழந்தை ஞானஸ்நானம், ஞானஸ்நானம் கொடுக்கும் முறையை குறித்து சபை சரித்திர ஆசிரியர்கள் கூறும் கருத்துகள், ஞானஸ்நானத்தினால் என்ன ஆசீர்வாதம் என்பதை குறித்து மிக தெளிவாக எழுதப்பட்டு உள்ளது.

எனவே இதை வாங்கி படியுங்கள், இன்னும் தெளிவான மனநிலை நமக்கு உண்டாகும்படி பரிசுத்த ஆவியானவர் உதவி செய்வார். மற்றவர்களை வாங்கி படிக்க தூண்டுங்கள்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்.

கிறிஸ்துவின் பணியில்...

**J.டைட்டஸ்** B.A.,B.Th.,M.Div

# பொருளடக்கம்


**அதிகாரம் 1 ஞானஸ்நானம் தோன்றிய விதம்**

ஞானஸ்நானம் என்பது என்ன? முதலாவது அதைப் பிரசங்கித்தது யார்? யோவான் கொடுத்த ஞானஸ்நானம் - அவன் மூலமாய் குணப்பட்டவர்கள் - அவன் ஞானஸ்நானங் கொடுத்த விதம் - இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம் - இயேசு கிறிஸ்து வைத்துப் போன மாதிரிகள் - யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தின் பலன்கள்.

**அதிகாரம் 2 புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம்**

புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தின் கூடுதலான முக்கியத்துவங்கள் - ஞானஸ்நானம் எடுப்பதற்குரிய தகுதிகள் - அப்பொல்லோவினால் குணப்பட்டவர்களுக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதன் காரணம் - புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானங் கொடுக்கத் தகுதி உள்ளவர்கள்.

**அதிகாரம் 3 குழந்தை ஞானஸ்நானம்**

ஞானஸ்நானம் எடுக்க மூன்று நிபந்தனைகள் - வீட்டார் என்பதின் விளக்கம் - விருத்த சேதனம் குழந்தை ஞானஸ்நானத்தி லிருந்து வித்தியாசமானது - குழந்தை ஞானஸ்நானம் பெற்றோர் செய்யும் உடன்படிக்கை என்னும் தவறான தர்க்கம் - குழந்தை ஞானஸ்நானம் தோன்றிய விதம் - சபை சரித்திரத்திலிருந்து சில பகுதிகள்.

**அதிகாரம் 4 ஞானஸ்நானம் கொடுக்கும் முறை**

'முழுக்கு' என்பதின் விளக்கம் - ஜாண் வெஸ்லி, கால்வின், ஆடிசும் ஆர்னால்டும், லூதர், நியான்டர், டபுள்யு ஜோன்ஸ், இ.டி.பிரசன்ஸ், ஜஸ்டின் மார்டர் ஆகியோரின் வியாக்கியானங்கள்.

# பொருளடக்கம்

**அதிகாரம் 5 ஞானஸ்நானத்தில் சம்பவிப்பது என்ன?**

தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு ஒரு படி - பாவ சுபாவத்துக்கு மரணம் (சிவந்த சமுத்திரத்தைக் கடந்ததும், நோவாவின் காலத்தில் உண்டான ஜலப்பிரளயமும் விளக்கப்பட்டுள்ளது) - பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள ஒரு படி - வசனத்தினால் கிடைக்கும் பரிசுத்தமாகுதல் தொடங்குகிறது - ஜெய ஜீவியம் ஆரம்பமாகிறது - சரீர உயிர்த்தெழுதலை நிச்சயப்படுத்துகிறது.

**அதிகாரம் 6 ஞானஸ்நானக் கட்டளை**

மத்தேயு 28:18-20ல் கட்டளையிட்டபடி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே கொடுக்கப்பட வேண்டிய ஞானஸ்நானத்தைப் பற்றிய விளக்கம்.

இயேசுவின் நாமத்தில் மாத்திரம் ஞானஸ்நானம் கொடுப்பவர்களின் கீழ்க்கண்ட ஐந்து தர்க்கங்களின் தவறென நிரூபிக்கின்றது.

1. மத்தேயு 28:19 புதிய ஏற்பாட்டு பகுதிகளில் உறுதிபண்ணப்படவில்லை.

2. ஆதி சபையானது இயேசுவின் நாமத்தினால் மட்டும் ஞானஸ்நானம் கொடுத்தது.

3. 'பிதா', 'குமாரன்', 'பரிசுத்த ஆவி' என்பவைகள் பெயர்கள் அல்ல, பட்டங்களே.

4. புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானமானது பழைய ஏற்பாட்டு விருத்தசேதனத்திற்கு ஒத்திருக்கிறது.

5. இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறாதவர்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

**அதிகாரம் 7 ஞானஸ்நானத்தில் உள்ள வல்லமை**

# அதிகாரம்

# 1

# ஞானஸ்நானம் தோன்றிய விதம்



உண்மையில் ஞானஸ்நானம் என்றால் என்னவென்றும் முதலாவது அதைப் பிரசங்கித்தது யார் என்றும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் என்னவென்றும் இவ்வதிகாரத்தில் நாம் காண்போம்.

**ஞானஸ்நானம் என்பது என்ன?**

ஞானஸ்நானம் என்ற பதமே அதனுடைய அர்த்தத்தை விளக்குகிறது. பாப்டிஸம் என்பது ஓர் ஆங்கில பதம் அல்ல. அது பாப்டைஸோ என்ற கிரேக்க பதத்திலிருந்து வந்தது. பாப்டைஸோ என்பதற்குக் கிரேக்க பாஷையில், ஒரு பொருளை நீர் அல்லது திரவ மட்டத்தின் கீழ் அமிழ்த்தி, பின்பு அதனை வெளியே எடுப்பது என்று அர்த்தம். யோவான்ஸ்நானன் காலம் வரைக்கும் பழைய ஏற்பாட்டு காலத்தில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக எவ்வித சம்பவத்தையும் நாம் காண்கிறதில்லை. இது மோசேயின் நியாயப் பிரமாணத்தில் இருக்கவில்லை. ஆசாரியர்களாலும் தீர்க்கதரிசிகளாலும் போதிக்கப்படவுமில்லை. ஆனால் இதற்கு ஒப்பனையான ஒரு காரியத்தை அங்கே நாம் காண்கிறோம். கர்த்தருக்கு ஊழியஞ் செய்யும்படி ஆசாரியர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன் அவர்களது சரீரங்கள் தண்ணீரினால் கழுவப்பட்டு (முழுக்கப்பட்டு அல்ல). அவர்கள் வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட்டிருந்தார் (யாத். 29:4-7). பழைய ஏற்பாட்டில் கைக்கொள்ளப்பட்ட இச்சடங்குகள் நிமித்தமாக முழுக்குதல் முறையில் கொடுக்கப்பட்டுவந்த ஞானஸ்நானத்தில் இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டதென உறுதியாக நம்பப்படுகிறது. தண்ணீரில் முழுக்குவதற்குப் பதிலாக மனந்திரும்பினவர்களின் மேல் தண்ணீரைத் தெளிக்க ஆரம்பித்தார்கள்.

## ஞானஸ்நானத்தைக் குறித்து முதலாவது பிரசங்கித்தது யார்?

இவர் (கிறிஸ்து) வெளிப்படுவதற்கு முன்னே மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்து யோவான் இஸ்ரவேலர் யாவருக்கும் பிரசங்கித்தான் (அப். 13:24) என்று வேதம் சொல்லுகிறது. ஞானஸ்நானம் கொடுக்கும்படி தான் தேவனிடத்திலிருந்து நேரடியாகக் கட்டளை பெற்றதாக (யோவா. 1:33) யோவான் ஸ்நானன் கூறுகிறான்.

## யோவான் கொடுத்த ஞானஸ்நானம் :

யோவான்ஸ்நானன் கிறிஸ்துவுக்காக ஜனத்தை ஆயத்தப்படுத்தும்படி அவருக்கு முன் வந்த ஒரு முன்னோடி மட்டுமே. மனந்திரும்புதலைக் குறித்துப் பிரசங்கிப்பதும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மெய்யாகவே மனந்திரும்பினவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதும், அவர்களைப் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் அபிஷேகிக்கப் போகிறவராகிய கிறிஸ்துவை அவர்களுக்குப் பிரசங்கிப்பதுமே அவனுடைய பிரதான ஊழியமாய் இருந்தது (மத். 3:6, 11). அவன் தேவாலயத்திற்கு அடுத்த விஷயங்களிலும், அப்பொழுதிருந்த ஆசாரியத்துவத்திலும் அவர்களுடைய உபதேசத்திலும் தலையிடாமல், பாவத்தின் கொடூரத்தையும், பாவத்தின் சம்பளத்தையும் குறித்தே வலியுறுத்தி எச்சரித்தான். தன்னுடைய ஜீவியம் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்பதையும், கிறிஸ்துவின்

மேன்மையுடன் அது ஒப்பிடத்தக்க தல்லவென்பதையும், தான் கொடுக்கும் ஞானஸ்நானம் மனந்திரும்புதல் என்னும் கிறிஸ்துவின் ஆரம்ப உபதேசம் ஒன்றுடன் மட்டும்தான் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதையும் தன் மூலம் குணப்பட்டவர்களுக்குத் தெளிவாக்கினான். (மத். 3:11).

**அவனால் குணப்பட்டவர்கள் :**

அவன் ஒருக்காலும் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததில்லை. அது மட்டுமல்ல, வயது வந்தவர்களும் கூட பாவத்தின் மேல் நாட்டமுள்ளவர்களாய் இருப்பதாக அவன் கண்டால், அவர்களுக்கு அவன் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. தேவனை விட்டும் தேவனுடைய வசனத்தை விட்டும் வழுவிப்போய் தங்கள் தரத்திலே குறைந்து போன பரிசேயரையும், சதுசேயரையும் அவன் கண்டபோது அவர்களை விரியன் பாம்புக்குட்டிகளே என்று அழைத்து மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். (மத்.3:7,8) எனக் கட்டளையிட்டான். ஞானஸ்நானத்தை தன்னுடைய ஊழியத்தை விரிவுபடுத்துவதற்கோ அல்லது தன்னைப் பின்பற்றுகிறவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ அவன் பயன்படுத்தவில்லை. தன் மூலம் குணப்பட்டவர்களுக்கு, தன்னுடைய ஞானஸ்நானமானது, நரகத்திலிருந்தோ அல்லது பாவ ஜீவியத்தைத் தொடருவதிலிருந்தோ தப்பித்துக் கொள்வதற்கு ஒரு நிச்சயமான வழி என்று அவன் உறுதியளிக்க வில்லை.

**அவன் ஞானஸ்நானம் கொடுத்த விதம் :**

யோவான் ஸ்நானன் ஜனங்களைத் தண்ணீருக்குள் அமிழ்த்தாமல் தலையிலோ அல்லது நெற்றியிலோ தண்ணீரைத்

தெளித்ததாகக் குழந்தை ஞானஸ்நானத்தை ஆதரிக்கிறவர்கள் ஒரு பாரம்பரியமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இக்கருத்தானது வேத வாக்கியத்திற்கு, தண்ணீர் மட்டத்தின் கீழ் அமிழ்த்துவது என்று அர்த்தங் கொள்ளும் பாப்டைஸோ என்னும் பதத்திற்கும் முரண்பாடாக இருக்கிறது. அன்றியும் அவன் ஒரு குவளையிலிருந்தோ அல்லது பாத்திரத்திலிருந்தோ தண்ணீரை எடுத்துத் தெளிக்கவில்லை என்பது வெள்ளிடை மலையாகும். அவன் யோர்தான் நதியில் அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து வந்தான். சரீரத்தை முழுவதுமாய் நீருக்குள் அமிழ்த்த போதிய ஆழமில்லாத இடங்களை அவன் தவிர்த்து நதியின் ஆழமான பகுதிகளைத் தெரிந்து கொண்டான். சாலிம் ஊருக்குச் சமீபமான அயினேன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்த படியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானங் கொடுத்துவந்தான். (யோவா. 3:23) என வாசிக்கிறோம்.

## இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம் :

இயேசு கிறிஸ்து பாவமில்லாதவராய் இருந்தபடியால் அவருக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை. அவர் தேவனுடைய மாசற்ற குமாரன், அவர் மனஸ்தாபப்படுவதற்கு அல்லது மனத்திரும்புவதற்கு ஏதுவாய் அவரிடம் எதுவுமில்லை. அப்படியாயின், அவர் ஏன் ஞானஸ்நானம் எடுத்தார்? அவருடைய சொந்த வார்த்தைகளின்படி அது எல்லா நீதியையும் நிறைவேற்று வதற்காகும் (மத். 3:15).

நியாயப்பிரமானத்தின் சாபத்தினின்று நம்மை விடுவிக்க கிறிஸ்து நியாயப்பிரமாணம் யாவையும் முழுவதுமாய் நிறைவேற்ற வேண்டியதாயிற்று (கலா. 4:4,5). அது மாத்திர மல்ல, அவரைப்

பின்பற்றுகிறவர்களாகிய நமக்கு (அவர்) உண்டு பண்ணின புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் நாம் அவரைப் பின்பற்றும்படி கருத்தாய் நமக்கு ஒரு முன்மாதிரியை வைக்க வேண்டியதாயிருந்தது (எபி.10:19). அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன் என்றும் (யோவா. 17:19), வேறொரு சந்தர்ப்பத்தில், நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். (யோவா. 13:15) என்றும் அவர் சொல்லக் கூடியவராயிருந்தார். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டு மிருக்கிறீர்கள் ; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை (1 பேது. 2:21,22) என்று பேதுரு கூறுகிறார். ஞானஸ்நானத்தைக் குறித்த விஷயத்தில் இயேசு நமக்கு வைத்துப்போன மாதிரி என்ன?



1. அவர் வயது வந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டார். குழந்தையாயிருந்தபோது மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி (மற்ற குழந்தைகளைப் போல) அவர் விருத்தசேதனம் பண்ணப்பட்டிருந்தாலும் குழந்தையாயிருந்தபோது அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லை.

2. அவருடைய ஞானஸ்நானம் தெளித்தல் மூலமாக இல்லாமல் முழுக்கிக் கொடுக்கப்பட்டதேயாகும். இயேசு யோர் தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார். அவர் ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, வானம் திறக்கப்

பட்டதையும், .... கண்டார் (மாற். 1:9,10). சிலர் உறுதியாய்க் கூறுகிறது போல, இயேசு தண்ணீரில் மூழ்க்கப்படாமல் தெளிக்கப்பட்டிருப்பாரானால், நதியைத் தேடவோ அல்லது தண்ணீருக்குள் இறங்க வேண்டிய அவசியமோ இல்லையே.

இயேசு கிறிஸ்துவினால் நமக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின் மூலம் குழந்தை ஞானஸ்நானத்தையோ அல்லது தெளித்தல் ஞானஸ்நானத்தையோ நாம் ஆதிரிக்கக் கூடாது என்று அறிந்து கொள்ளுகிறோம்.

## யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தின் பலன்கள் என்ன?

1. இது யோவானுடைய உபதேசங்களுக்கும் யூத மார்க்கத்தின் போதகர்களுடைய உபதேசங்களுக்கும் இடையே புதிய பிரிவினையையும் முரண்பாடான கடுமையான தர்க்கத்தையும் கொண்டு வந்தது. அவர்கள் அவனைப் பார்த்து, நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்க தரிசியானவருமல்ல வென்றால், ஏன் ஞானஸ்நானங் கொடுக்கிறீர் என்று (யோவா. 1:25) அவனுடைய அதிகாரத்தைக் குறித்து வினவினர். அவர்களுக்கு ஆவிக்குரிய தரிசனம் கிடையாது. தேவனுடைய சிந்தையை அவர்களால் அறிந்து கொள்ளவும் முடியவில்லை. ஞானஸ்நானத்தை தேவனுடைய கட்டளையாக அவர்களால் ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமோ அவனாலே ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள் (லூக். 7:30) என வேதம் கூறிகிறது.

இன்றைக்கும்கூட, தெளித்தல் மூலம் குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும்

என்று வாதாடி வருகிற பாரம்பரிய சபைகள், தங்கள் பாரம்பரியங்களில் சிக்குண்டிருப்பதால் வேத வசனத்தின் படியுள்ள முழுக்கு ஞானஸ்நானத்தைத் தாழ்மையாய் ஏற்றுக் கொள்வது அவர்களுக்கு மிகவும் கடினமான காரியமாயிருக்கிறது. தங்கள் தவற்றை ஒப்புக் கொண்டு இரண்டாவது ஞானஸ்நானம் எடுப்பதற்கு மிகுந்த தாழ்மை தேவை.

2. இது அவர்களுடைய யூத சபைகளில் பிரிவினைகளை உண்டாக்கிற்று. யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும், அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். (லூக். 7.29) என்ற வசனத்திலிருந்து யோவான் ஸ்நானனுடைய ஞானஸ்நானத்தை எதிர்த்த தலைவர்கள், அநேகரைச் சபைகளுக்குப் புறம்பாக்கியிருக்கக்கூடும் என்று தெளிவாய் விளங்குகிறது.

இன்றைக்கும்கூட சரியான ஞானஸ்நானத்தைக் குறித்து உணர்த்துவிக்கப்படுகிறவர்களும் தங்கள் தலைவர்களுக்குப் பயப்படுகிறபடியினால் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியத் தீர்மானிக்கிறதில்லை. அவர்கள் தேவனால் வருகிற கனத்தையும், நீதிகரித்தலையும் விட தங்களட மதகுருக்களால் வரும் கனத்தையும். நீதிகரித்தலையும் தேடுகிறார்கள். தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக் கொள்றுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவா. 5:44) என்று இயேசு சொன்னார். அது மாத்திரமல்ல, சத்தியத்தைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொண்ட பின் சரியான ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டவர்கள், தங்கள் சபைக்குப் புறப்பாக்கப்பட்டார்கள் என்பதும் உண்மை.

தேவன் நம் பட்சத்திலிருந்து நம்மை நீதிகரித்து நமக்காக யுத்தம் பண்ணுவதற்காக உபத்திரவத்தின் மத்தியிலும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து சுத்த மனச்சாட்சியோடு ஜீவிப்பது தான்

# அதிகாரம்

# 2

# புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம்

பெந்தெகோஸ்தே நாள் முதல், மேல் வீட்டறையில் பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ளுதல் மூலமாய்ப் புதிய ஏற்பாட்டுச் சபையானது பிறந்தபின், யோவானுடைய ஞானஸ்நானத்தின் இடத்தை, இயேசு கிறிஸ்துவினால் நேரடியாய்க் கொடுக்கப்பட்ட கட்டளையாகிய புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானமானது எடுத்துக் கொண்டது. யோவான் ஸ்நானன் பிரசங்கித்த மனந்திருப்புதலைத் தவிர பரிசுத்த அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியால் வெளிப்படுத்தப்பட்ட இன்னும் அநேக ஆவிக்குரிய பிரமாணங்களும், ஆசீர்வாதங்களும் அதோடு கூட கிடைக்கின்றன. இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். (யோவான் 16:12,13)

யோவான்ஸ்நானனுக்கு வெளிப்படுத்தப்படாத - புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தின் மேன்மையான முக்கியத்துவங்கள் சிலவற்றைக் குறித்துக் கீழே காண்போம்.

1. தேவனுடைய (ஆவிக்குரிய) இராஜ்யத்துக்குள் பிரவேசிக்க புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானமானது ஒரு படியாயிருக்கிறது.

இயேசு பிரதியுத்திரமாக; ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (யோவா. 3:5) என்றார்.

2. தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் பழைய மனுஷனுக்கு அல்லது மனுஷனில் இயற்கையாகவே இருந்து வரும் பாவ சுபாவத்துக்கு மரிக்கிறோம்.

பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (ரோம. 6:1,3).

3. இது பழைய மனுஷன் முழுவதும் தன் பாவசரீரத்தோடு அடக்கம் பண்ணப்படுவதைக் காட்டுகிறது.

புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் ஜீவனில் (இதனை நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தில் பெற்றுக் கொள்ளுகிறோம்) பங்குபெறும் நம்பிக்கையுடன் கிறிஸ்துவின் மரணத்தில் பங்கு பெறுகிறோம்.

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். (ரோம. 6:4-6).

4. ஜெபஜீவியம் இதிலிருந்து ஆரம்பமாகிறது. நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம். மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை (ரோம. 6:6,7,9).

5. இதினால் நாம் பாவத்திற்கு மரிப்பது மட்டுமல்ல, நமக்குள் கிரியை செய்யும் பாவத்தின் முரட்டாட்டமான சுபாவத்தினின்று இரட்சிக்கப்படுகிறோம், அல்லது விடுதலையாக்கப்படுகிறோம் (மாற். 16:16).

ஆகையால் இது இரட்சிப்பு என்று அழைக்கப்படுகிறது. கலகமுண்டாக்கும் இப்பாவசுபாவமானது, இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்த பொழுது அவர்களைப் பின் தொடர்ந்ததான பார்வோனின் சேனைகளுக்கு ஒப்பாயிருக்கிறது.

இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் (1 கொரி. 10:1,2).

6. பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இது ஒரு ஆயத்தப் படியாய் இருக்கிறது.

பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப். 2:38).

7. நம்முடைய சரீரம் எழுத்தின்படி உயிர்த்தெழுவதற்கு அல்லது கிறிஸ்துவின் வருகையிலே நமது சரீரங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு இது ஒரு முக்கியமான படியாயிருக்கிறது.

அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலி(ன்) (சாயலி)லும் இணைக்கப்பட்டிருப்போம். (ரோமர் 6:5).

**ஞானஸ்நானம் எடுப்பதற்குரிய தகுதிகள் :**

தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இருதயங்கள்

இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறது என்ற நிச்சயத்தோடு, தேவனிடத்திலிருந்து ஒரு உண்மையான அனுபவத்தைப் பெற்றுக்கொண்டு, மறுபடியும் பிறந்த விசுவாசிகள் மட்டுமே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதாக புதிய ஏற்பாடு வெளிப்படுத்துகிறது. விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். (மாற்கு 16:16).

மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். (அப். 2:38).

அப்பொழுது எருசலேம் நகரத்தாரும்... அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள். (மத்தேயு 3:5,6)

ஜீவியத்தில் பூரணமாற்றம் ஏற்பட வேண்டும் அல்லது ஜீவியம் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு விசுவாசிப்பது, மனந்திரும்புவது, பாவங்களை அறிக்கையிடுவது இவையெல்லாம் மறுபடியும் பிறக்கும் அனுபவத்துக்கு வழி நடத்துகின்றன என்பதைக் கவனிக்கவும்.

**யோவான் ஸ்நானனைப் பின்பற்றியவர்கள் :**

அப்போஸ்தலருடைய நடபடிகளில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியைக் காண்கிறோம். யோவான் கொடுத்த (முழுக்கு) ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்தவர்களாகிய சில விசுவாசிகளுக்கு

(சீஷர்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்கு) பவுல் மறுபடியும் ஞானஸ்நானம் கொடுத்ததாக வாசிக்கிறோம். அப்பகுதியை வேதத்தில் இருக்கிற வண்ணமாகவே இங்கு எடுத்துரைக்கிறோம்.

அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில் பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு, நீங்கள் விசுவாசிகளான போது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள் பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது அவன், அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள் : யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள்.

அப்பொழுது பவுல் : யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கத்தரிசனஞ் சொன்னார்கள். அந்த மனுஷரெல்லாரும் ஏறக்குறையப் பன்னிரண்டு பேராயிருந்தார்கள். (அப். 19:1-7)

இப்பகுதியிலிருந்து இவர்கள் அப்பொல்லோவின் மூலம் மனந்திரும்பியவர்கள் என்பது தெளிவாகிறது. சாதுரியவானும், வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன்.. கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக்கொண்டு வந்தான் (அப். 18:24,25) என்று இந்த அப்பொல்லோவைக்

குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இவன் தண்ணீர் ஞானஸ்நானம், பரிசுத்தாவி, இன்னும் புதிய ஏற்பாட்டு சபையின் மேன்மையான போதனைகள் ஆகியவைகளைப் பற்றிய ஆழமான சத்தியத்தைக் குறித்து அறியாதவனாயிருந்தான். இவன் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதித்து வந்ததைப் பவுலோடு சேர்ந்து ஊழியம் செய்த ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் கண்ட போது, அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப்.18:26).

அந்தப் பன்னிரண்டு சீஷர்களுக்கும் மறுபடியும் ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டதன் காரணத்தை இங்கே நாம் காணலாம். மனந்திரும்புதலுக்கென்று கொடுக்கப்படும் யோவானுடைய ஞானஸ்நானத்தை மாத்திரம் அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்களுக்கு ஆழமான சத்தியங்களை அப்பொல்லோ போதித்திருக்க முடியாது. ஏனெனில், அவனுக்கே தேவனுடைய வழி அதிகத் திட்டமாய்ப் போதிக்கப்பட வேண்டியதாயிருந்தது. ஆகவே, புதிய ஏற்பாட்டு சபையின் தண்ணீர் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் போன்ற உபதேசங்களைப் பற்றிப் புதிதாய் வெளிப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாட்டு சத்தியங்களை அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பது புலனாகிறது.

பவுல் அவர்களைப் பார்த்து, நீங்கள் விசுவாசிகளான போது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா? என்று கேட்டதையும், அதற்கு அவர்கள் இல்லை என்று மாறுத்தரம் கொடுத்துத் தங்கள் அறியாமையை வெளிப்படுத்தியதையும் காணும் போது, யோவான் மனந்திரும்புதலுக்கென்று மட்டும் ஞானஸ்நானங் கொடுத்தான் என்றும், புதிய ஏற்பாட்டு நியமம் தொடங்கிய பெந்தெகொஸ்தே நாளிலிருந்து அது செல்லாமற் போயிற்று என்றும் பவுல் தெளிவாய் அவர்களுக்குப் போதித்தார் என்று நாம் விளங்கிக் கொள்ளலாம். ஏனெனில் அந்த நாளில் ஞானஸ்நானமானது பரிசுத்த ஆவியைப்

பெற்றுக் கொள்ள ஆயத்தப்படுத்தும் ஒரு படியாயிருக்கிறது என்னும் சத்தியங்களும், தண்ணீர் ஞானஸ்நானத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டன. அவர்கள் இரண்டாம்முறை ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட மாத்திரத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் என்ற உண்மையானது, பரிசுத்த ஆவியைப் பெறப் புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் ஒரு படியாயிருக்கிறது என்னும் சத்தியத்தை உறுதிப்படுத்துகிறது.

பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பற்றிய தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அறியாமல் பிரசங்கித்த அப்பொல்லோவைப் போல சத்தியத்தை ஒரு எல்லைக்குட்பட்ட அளவில் பிரசங்கிக்கிற அநேக சுவிசேஷ சபைகள் இன்றைக்கு முழு உலகத்திலும் உள்ளன. அவர்கள் தங்கள் மூலம் குணப்பட்டவர்களுக்கு, ஞானஸ்நானமானது ஒரு ஆழமான ஜீவியத்துக்கு வழிநடத்தக் கூடியது என அதன் முக்கியத்துவத்தை உணர்த்திக் காட்டாமல் வெறும் மனந்திரும்புதலுக்குரிய ஞானஸ்நானத்தை மட்டும் போதிக்கிறார்கள். பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கித்தபடி பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ள தண்ணீர் ஞானஸ்நானம் ஒரு படி (அப். 2:38) என்பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள். குணப்படுதலில் அல்லது மறுபடியும் பிறக்கிற அனுபவத்தில் ஒருவன் பரிசுத்தாவியைப் பெறுகிறதாகச் சில சபைகள் போதிக்கின்றன. இப்படிப்பட்டவர்களுடைய விஷயத்தில், புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தின் மேன்மைகளையும், விசேஷமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பற்றிய சத்தியத்தையும் அனுபவமாக்கிக் கொள்ள, அவர்கள் மறுபடியும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

## ஞானஸ்நானம் கொடுக்கிறவர்கள் :

யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம் அல்லது கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று தன்னை அழைத்துக் கொள்ளுகிற எவரும் ஞானஸ்நானம் கொடுக்கலாமா என்பது அடுத்த கேள்வி.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தாவி ஊற்றப்பட்டது புதிய ஏற்பாட்டு சபை ஆரம்பமானது என்பது அநேக சபைகள் பொதுவாக விசுவாசிப்பதும் யாவரும் அறிந்ததுமான உண்மையுமாயிருக்கிறது. இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல்... பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப். 1:4,5). அதன்பின் சபையானது ஆவியினால் நிறைந்த அவருடைய ஊழியக்காரரால் நடத்தப்பட்டது. பவுல் இதை ஆவிக்குரிய ஊழியம் (2 கொரி. 3:8) என்று அழைக்கிறார். புதிய ஏற்பாட்டு ஊழியர்களைக் குறித்து அவர்கள் எழுத்தின்படியல்லாமல் (நியாயப் பிரமாணம்), ஆவிக்குரிய புது உடன்படிக்கையின் தகுதியுள்ள ஊழியர்கள் (2 கொரி. 3:6) என்று கூறுகிறார். இயேசுவைக் குறித்து நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார். (அப். 10:38) என்கிறார். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பேயுள்ள அப்போஸ்தலரது ஊழியத்திற்கும், அதற்குப் பின் அவர்கள் செய்த ஊழியத்திற்கும் ஒரு வித்தியாசம் இருந்தது.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் பரிசுத்தாவியானவர் அவர்கள் உடன் இருந்தார். ஆனால் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் அவர், அவர்களுக்குள் இருந்தார். ..... அவர் (பரிசுத்த ஆவியானவர்) உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால் (இருக்கப் போவதால் யோவா. 14:17 என்று இயேசு கூறினார்.

பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படி ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும் முன் பரிசுத்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள் (யாத். 30:30). அது போன்றே புதிய ஏற்பாட்டு ஊழியரும் முதல் நூற்றாண்டு அப்போஸ்தலலைப் போல பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும்.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் அப்போஸ்தலர் எவ்விதம் ஊழியம் செய்தார்களோ அதே நிலவரத்தில்தான் அப்பொல்லோ கர்த்தருக்குச் சேவை செய்து வந்தான். பரிசுத்த ஆவியானவர் அவனோடு இருந்தார். ஆனால் அவனுக்குள் இருக்கவில்லை. ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியத்தைப் பெற்ற பவுல், எபேசுவிலே அப்பொல்லோவினால் குணப்பட்டவர்களுக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடுத்ததற்கு அது இன்னொரு காரணமாகும் (அப்.16:5). ஆதலால், அந்நியபாஷை அடையாளத்துடன் பரிசுத்த ஆவியைப் பெற்ற (அப். 2:4) கிறிஸ்துவின் ஊழியரால் மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும்.

# அதிகாரம்

# 3

# குழந்தை ஞானஸ்நானம்

குழந்தை ஞானஸ்நானத்தையோ அல்லது தெளிப்பு ஞானஸ்நானத்தையோ அங்கீகரிக்க புதிய ஏற்பாடு முழுவதிலும் ஒரு வசனமாகிமில்லை. இப்படிக் கூறுவது சிலருக்கு ஆச்சரியமாயிருப்பினும், அது உண்மையாயிருக்கிறது. இயேசுவோ அல்லது அப்போஸ்தலரோ இவ்வித ஞானஸ்நானத்தை ஆதரிக்கவில்லை. சிலர் குழந்தை ஞானஸ்நானத்தை ஆதரிப்பதற்கு மத்தேயு 19:13-15ஐ மேற்கோளாக் காட்டுகின்றனர். அவ்வசனங்களைக் காணலாம்.

**13-ம் வசனம்** : அப்பொழுது சிறுபிள்ளைகளின் மேல் அவர் கைகளை வைத்து ஜெபம் பண்ணும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; கொண்டு வந்தவர்களை சீஷர்கள் அதட்டினார்கள்.

**14-ம் வசனம்** : இயேசுவோ சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடை பண்ணாதிருங்கள். பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொல்லி,

**15-ம் வசனம்** : அவர்கள் மேல் கைகளை வைத்து, பின்பு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போனார்.

இவ்வசனங்களிலிருந்து கீழ்க்கண்ட உண்மைகள் தெளிவாய் விளங்குகின்றன.

1. அவர்கள் சிறுபிள்ளைகளை அவரிடத்தில் கொண்டு வந்தது. இயேசு அவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபம் பண்ணும்படிக்கேயல்லாமல் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படிக்கு அல்ல.

2. இயேசு அவர்கள் மேல் கைகளை வைத்தார்; அவர்களுக்கு அவர் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. அவர்கள் மேல் தண்ணீரைத் தெளிக்கவுமில்லை.

3. இயேசு கூறிய சில குறிப்பிடத்தக்க வார்த்தைகளை கவனியுங்கள். பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்கள் (பிள்ளைகள்)

உடையது என்று கூறியதின் மூலமாக பிள்ளைகள் தேவ சமூகத்தில் பாவமில்லாதவர்கள் என்றும், எனவே அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் அங்கீகரிக்கப்படத் தக்கவர்கள் என்றும் தெளிவாகிறது. இயேசு அவர்கள் மேல் கைகளை வைத்தது அவர்கள் மேல் தண்ணீரைத் தெளித்ததைக் காண்பிக்கிறது என்று இன்னும் சிலர் தர்க்கம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் மேல் கைகளை வைக்கும் முன்னதாகவே பரலோக ராஜ்யம் இப்படிப்பட்டவர்களுடையது என்று அவர் கூறியதிலிருந்து அவர்களுக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்பது தெளிவாய் விளங்குகிறது. மற்றெந்த தலைமுறையிலும் உள்ள குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் ஒரு போதும் அவசியமாகவில்லை.

## ஞானஸ்நானம் எடுப்பதற்கு மூன்று நிபந்தனைகள் :

ஞானஸ்நானம் எடுக்க விரும்பும் எவரும் குறைந்தது மூன்று நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். முதலாவது, அவர்கள் கிறிஸ்துவிலும் அவருடைய சுவிசேஷத்திலும் விசுவாசம் வைக்க வேண்டும். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் (மாற். 16:16). இரண்டாவதாக, அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட வேண்டும். நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். (அப். 2:36). மூன்றாவதாக, அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட வேண்டும். தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள் (மத். 3:6).

குழந்தைகள் இம்மூன்று நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியுமா? அவர்கள் கிறிஸ்துவையோ

அல்லது சுவிசேஷத்தையோ விசுவாசிப்பதற்கும், ஞானஸ்நான சத்தியத்தைக் கிரகித்துக் கொள்ளவும் தங்கள் மனோ சக்தியையும் ஆவிக்குரிய அறிவையும் உபயோகிக்கக்கூடிய நிலவரத்தில் இருக்கிறார்களா? அவர்கள் தங்கள் மனச்சாட்சியின் உதவியைக் கொண்டு தவறானவற்றினின்று சரியானவற்றையும், தீமையினின்று நன்மையையும் பகுத்தறியத்தக்க அளவுக்கு தங்களுடைய அறியாமையின் நிலைக்கு அப்பால் வளர்ந்திருக்கிறார்களா? அவர்கள் மனந்திரும்பத்தக்கதாய்ப் பாவத்தைக் குறித்து உணர்த்துவிக்கப்படக் கூடுமா? அவர்கள் எதை அறிக்கை செய்ய வேண்டும்? அவர்களால் எப்படி அறிக்கை செய்ய முடியும்? பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று கர்த்தர் சொன்னபோது அவருடைய ஆசீர்வாதங்களுக்குத் தகுதியாய் இருக்கும் அளவுக்கு அவர்கள களங்கமற்ற நிலைமையில் இருக்கிறார்களல்லவா? குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது சரியென்று எப்படி நிரூபிக்க முடியும்?

## வீட்டார்

சிலர் அப்போஸ்தலருடைய காலத்தில் குடும்பம் முழுவதும் அல்லது வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதாகக் கூற அதை நிரூபிக்கும்படியாக கொர்நேலியு, லீதியாள், ரோம சிறைச்சாலைக்காரன், ஸ்தேவான் ஆகியோரின் வீட்டாரைச் சுட்டிக்காட்டி வாதாடுகிறார்கள். இந்நான்கு சம்பவங்களையும் நாம் கவனமாய் ஆராய்வோம்.

## கொர்நேலியுவின் வீட்டார் :

கொர்நேலியு 'தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்த'வனாயிருந்தான் என்பது உண்மை. தனக்கு வசனத்தைப் பிரசங்கிக்கப் போகிறதான அப்போஸ்தலனாகிய பேதுருவை அழைப்பிக்கும்படி ஒரு தூதன் அவனுக்குச் சொன்னான். பேதுரு வந்து சேர்ந்த போது கொர்நேலியு அவரைப் பார்த்து, “தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள்

எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமூகத்தில் கூடியிருக்கிறோம்" என்று சொன்னான் (அப். 10:33). பின் பேதுரு வசனத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்தான். 'வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்' (அப்.10:44). அவர்கள் மேல் பரிசுத்த ஆவி பொழிந்தருளப்பட்டதன் மூலமாய் சுவிசேஷத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டனர் என பேதுருவிற்கு உறுதிப்படுத்தப்பட்ட போது அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டார். இதிலிருந்து அங்கே கூடியிருந்தவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்கக் கூடிய திறமையுள்ளவர்களாயிருந்தார்கள் என்பது தெளிவாகிறது. அவர்கள் அதை கேட்டது மாத்திரமல்ல, அவருடைய வசனத்தை அவருடைய கட்டளையாக ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் பரிசுத்தாவி பெற்றுக்கொள்வதற்கு ஏற்றதாக அவர்களுடைய இருதயங்கள் பரிசுத்தமாக்கப்படும் அளவிற்கு அவருக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாயிருந்தனர். குழந்தைகள் அந்தக் கூட்டத்தில் இருந்திருக்கக் கூடும். என்றாலும் வசனத்தைக் கேட்டு பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டவர்களோடு இவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட முடியாது.

## 2. லீதியாளின் வீட்டார் :

லீதியாளின் குணப்படுதலைக் குறித்தும் அவளுடைய வீட்டாரின் குணப்படுதலைக் குறித்தும் முழுவிவரம் வேதத்தில் காணப்படவில்லையென்றாலும், 'பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவளுடைய இருதயத்தைத் திறந்தருளினார்' என்று அவளுடைய குணப்படுதலைக் குறித்து எழுதப்பட்டதிலிருந்து ஞானஸ்நானத்திற்கு முன் நடக்க

வேண்டியதான கிருபையின் தொடக்க வேலையானது அவளுடைய ஜீவியத்தில் தெளிவாய்க் காணப்படுகிறது. அதுவுமல்லாமல் 'கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவள்' என்பதிலிருந்து அவள் நல்மனச்சாட்சியுள்ளவளாயிருந்தாள் என்பது புலனாகிறது (அப். 16:14,15). ஆகவே லீதியாளுக்கும் அவளைப் போன்ற அனுபவம் பெற்ற அவளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பவுல் ஞானஸ்நானம் கொடுத்தார் என்று சொல்லாமலே விளங்கும். கர்த்தரால் இருதயம் திறக்கப்பட்டு, பவுல் சொல்லியவைகளைக் கவனமாய் கேட்டுக் கொண்டிருந்தவர்களுடைய கூட்டத்தில் நாம் குழந்தைகளைச் சேர்க்க முடியாது.

## 3. பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரன் வீட்டார் :

சிறைச்சாலையை அதிரச் செய்து பவுலையும், சீலாவையும் விடுவித்த அற்புதமான பூமியதிர்ச்சியை பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரன் கண்டபோது ஆழமாய் உணர்த்துவிக்கப்பட்டான். அவர்கள் ஓடிப்போகவில்லை என்று கண்டு அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர் என்று அறிந்துகொண்டு அவர்களைப் பார்த்து, 'ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான் (அப். 16:18-30) இச்சம்பவத்தைக் கவனமாய்ப் பார்த்தால் அவனுடைய வீட்டாரனைவருக்கும் இருந்ததான ஒரேவிதமான மூன்று அனுபவங்கள் புலப்படுகின்றன.

பவுலும் சீலாவும் செய்த பிரசங்கத்தை வீட்டாரனைவரும் கேட்டார்கள். 'அவனுக்கும் அவனுடைய வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்' (அப் 16:32). அவன் வீட்டாரனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். 'அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்' (அப். 16:33)

அவன் வீட்டாரனைவரும் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாகி மனமகிழ்ச்சியாயிருந்தனர். 'தன் வீட்டார் அனைவரோடுங்கூடத் தேவனிடத்தல் விசுவாசமுள்ளவனாகி மன மகிழ்ச்சியாயிருந்தான்' (அப்.16:34).

குழந்தைகளுக்கு ஆவிக்குரிய முதிர்ச்சி இல்லாத படியால் தேவனுடைய செய்தியை அவர்கள் கேட்க முடியாது. இரட்சிப்பின் வழியும் அவர்களுக்கு விளங்காது. அவர்கள் விசுவாசமுள்ளவர்களாகி தேவனுக்குள் மகிழ்ச்சியாயிருக்கவும் முடியாது.

## 4. ஸ்தேவானுடைய வீட்டார் :

'ஸ்தேவானுடைய வீட்டாக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்ததுண்டு' (1 கொரி.1:16) என்று பவுல் கூறியது உண்மை. அவர் குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தாரா? அதே நிருபத்தில் ஸ்தேவானுடைய வீட்டாரைப் பற்றி, அவர்கள் 'பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்யும்படிக்குத் தாங்களை ஒப்புவித்திருக்கிறார்கள்' (1 கொரி. 16:15) என்று கூறுகிறார். குழந்தைகள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ய முடியுமா?

## விருத்தசேதனமும் குழந்தை ஞானஸ்நானமும் :

சிலர் பழைய ஏற்பாட்டு விருத்தசேதனத்தின் மூலம் குழந்தை ஞானஸ்நானத்தை நிரூபிக்க முயலுகின்றனர். அவர்கள் விருத்தசேதனத்திற்கும் ஞானஸ்நானத்துக்கும் பொதுவான அம்சங்கள் உண்டென்று கூறுகிறார்கள். வித்தசேதனமானது பிள்ளைகளை யூதசபைக்குட்படுத்தியது போலவே புதிய ஏற்பாட்டில் குழந்தை ஞானஸ்நானத்தின் மூலம் குழந்தைகள் புதிய ஏற்பாட்டுச் சபையில் அனுமதிக்கப்படுவதாகக் கருதுகின்றனர். ஆனால் நியாயம் போல் தோன்றுகிற இவ்வாதத்திற்கு வேதத்தில் எந்த ஆதாரமும் இல்லை.

விருத்தசேதனத்தின் ஸ்தானத்தை ஞானஸ்நானமானது

எடுத்துக் கொள்கிறதில்லை என்பதை தெளிவாகக் காண்பிக்கும் சில காரணங்களைக் கீழே காண்போம்.

1. விருத்தசேதனமானது, ஆபிரகாமின் தலைமுறையைக் குறித்து, அவனுக்கும் தேவனுக்கும் நடுவில் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடையாளமாகக் காணப்படுகிறது (ஆதி. 17:11-14). ஆனால் ஞானஸ்நானமோ, ஒரு குழந்தை ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருக்கிறது என்பதைக் காண்பிக்கும் ஒரு வெறும் அடையாளமல்ல. புதிய ஏற்பாட்டின் ஞானஸ்நானத்தில் உடன்படிக்கையானது தேவனுக்கும் தனித்தனி விசுவாசிக்கும் நடுவில் ஏற்படுத்தப்படுகிறது. ஒவ்வொருவரும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு ஞானஸ்நானத்தின் மூலமாய்க் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் மரணம், அடக்கம் ஆகியவற்றில் பங்கு பெறுகின்றனர் (ரோம. 6:3,4).

2. பவுல் விருத்தசேதனத்தை (இருதய விருத்தசேதனத்தை அல்லது குணப்படுத்தலைத் தொடர்ந்து வருகிற) ஞானஸ்நானத்துக்கு ஒப்பிடாமல், ஒரு பாவி தன் பாவத்தைத் தன் இருதயத்தினின்றும் தன் சரீரத்தினின்றும் களைந்து போட்டு மறுபடியும் பிறக்கும் போது சம்பவிக்கிறதான மனந்திரும்புகிற அனுபவத்தோடு ஒப்பிடுகிறார்.

'உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது' (ரோம.2:29).

'நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால்

செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்' (கொலோ. 2:11).

விருத்தசேதனத்தின் முக்கியத்துவத்தை விளக்கிச் சொல்லும் போது, மேற்கண்ட வேதவசனங்களில் பவுல், 'இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனம்', 'ஆவியின்படி கையால் செய்யப்படாத விருத்தசேதனம்', 'மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்து' என்ற சொற்றொடர்களை உபயோகிக்கிறார். விருத்தசேதனத்தின் நேரடியான அர்த்தம் ஞானஸ்நானமாக இருக்குமானால் இந்த சொற்றொடர்களில் பவுல் சொல்லுகிற அனுபவங்களின் வழியாய் குழந்தைகள் தங்கள் ஞானஸ்நானத்தின்போது சொல்லுகிறார்களா என்ற கேள்வி எழும்புகிறது.

3. பழைய ஏற்பாட்டில் ஆண்பிள்ளைகள் மாத்திரம் விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள். 'உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்.' (ஆதி. 17:10). அப்படியானால் பெண் குழந்தைகளுக்கு ஏன் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள்?

4. கிறிஸ்து யூத குழந்தைகளைப்போல் எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணப்பட்டார் (லூக். 2:21) ஆகிலும் தன்னுடைய ஊழியத்தின் துவக்கத்தில் தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். விருத்தசேதனமானது ஞானஸ்நானத்தைக் குறிப்பிடுகிறதாயிருந்திருந்தால் கிறிஸ்துவும் மற்ற அப்போஸ்தலரும் பின்பு ஞானஸ்நானம் பெற அவசியம் இல்லையே.

5. விருத்தசேதனத்துக்குப் பதிலாகவே ஞானஸ்நானமானது நியமிக்கப்பட்டதென்றால், பழைய ஏற்பாட்டில் சிறு பிள்ளைளும் பங்கு பெற்றிருந்ததான பஸ்காவுக்குப் பதிலாக கர்த்தருடைய பந்தி நியமிக்கப்பட்டதென்றும் வாதாடலாம் (யாத். 12:4). அப்படியானால் (உணவை ஜீரணிக்கத்தக்க பருவத்துக்கு வளர்ந்த) பிள்ளைகள் கர்த்தருடைய பந்தியில் சேருவதை ஏன் தடை பண்ண வேண்டும்?

**குழந்தை ஞானஸ்நானத்தின் போது பெற்றோர் செய்யும் உடன்படிக்கை :**

குழந்தை ஞானஸ்நானத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சபையில் சேர்க்கப்படத்தக்கதான ஒரு உடன்படிக்கையை சபையோடு பண்ணுகிறார்கள். அப்படிச் செய்யாவிட்டால் அப்பிள்ளைகள் சபைக்குப் புறம்பே இருப்பதாக அவர்கள் நினைக்கிறார்கள். அவ்வேளையில் அப்பிள்ளைகளுக்குத் தேவவசனத்தைப் போதிப்பதாகவும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நடக்க அவர்களைப் பழக்குவிப்பதாகவும் வாக்களிக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளுக்குப் போதித்து அவர்களைப் பழக்குவித்து, கர்த்தருடைய வழிகளிலே நடத்தும் பெரிய பொறுப்பு பெற்றோரைச் சார்ந்தது என்பது வெளிப்படையான உண்மை. ஆனால் அவர்கள் குழந்தை ஞானஸ்நானத்தில் கர்த்தரோடு இவ்வித ஒரு உடன்படிக்கை பண்ண வேண்டும் என்று வேதத்தில் எங்கும் நாம் காண்பதில்லை. பிள்ளைகள் பெரியவர்களாகும் போது பெற்றோரின் பொறுப்பு முடிவடைந்து தனிப்பட்ட முறையில் அவ்வாலிபப் பிள்ளைகள் தங்கள் இரட்சிப்பிற்குத் தாங்களே உத்தரவாதிகள் ஆகிறார்கள் என்றே தேவன் கருதுகிறார். அவர்கள் விசுவாசிகளின் ஞானஸ்நானமாகிய முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்னும் பொறுப்பு அவர்கள் மேலேயே சுமத்தப்படுகிறது.

## குழந்தை ஞானஸ்நானம் தோன்றிய விதம் :

குழந்தை ஞானஸ்நானம் தோன்றிய விதத்தைக் குறித்து மில்லர் எழுதிய சபை சரித்திரத்தில்

"லையான்ஸ் என்ற இடத்தின் பிஷப்பாயிருந்த ஐரேனியஸ் என்பவரே குழந்தை ஞானஸ்நானத்தை பற்றிக் குறிப்பாக பேசிய போதகர்களில் முதல்வர். அவர் கி.பி 200-ம் ஆண்டில் மரணமடைந்தார். ஆகையால் அவர் 2-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் தமது நூல்களை எழுதியிருக்கக்கூடும். அப்போஸ்தலர்கள் இதை ஒருபோதும் குறிப்பிடவில்லை. இதற்குள் பெரும் அளவுக்கு

மூடநம்பிக்கையானது விசுவாசத்தினுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொண்டது. ஆகையால் வேதபண்டிதர் சிலர் கொண்டுள்ள சில விநோதமான கருத்துக்களைக் கேட்க வாசகர்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும் என்றாலும் சந்தேகமின்றி, அவர்களில் அநேகர் உண்மையும் உத்தமுமான கிறிஸ்தவர்கள். எல்லா மனுஷரையும் தம்மாலே இரட்சிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கிறிஸ்து வந்தார். எல்லாரையும் என்று நான் கூறும்போது, அவரால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் - தேவனோடு சேர்ந்து கொள்ளும்படி ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள் குழந்தைகளும், சிறுபிள்ளைகளும், பிள்ளைகளும், வாலிபரும் வயோதிபரும் ஆவர். ஆதலால் பலவிதப் பருவங்களை அவர் கடந்து சென்றார். குழந்தைகளைப் பரிசுத்தமாக்கும்படி அவர்களுக்கு அவர் சிறுவராக்கப்பட்டார். அத்துடன், அவர்கள் முன் தேவபக்தி நீதி, கடமையுணர்வு ஆகியவற்றிற்கு தான் ஒரு திருஷ்டாந்தரமானார். வாலிபருக்கு அவர் வாலிபராய் வந்தார் என்று ஐரேனியஸ் கூறுகிறார். மனித வர்க்கத்தின் எல்லா பருவத்துக்கும் நிலைமைகளுக்கும் உரிய ஆத்துமாவின் முழுவிளக்கமே ஞானஸ்நானம் என்று போதிக்கப்பட்டது. கடைசியில் விவாதமானது குழந்தை ஞானஸ்நானமா? அல்லது வயது வந்தவர்கள் ஞானஸ்நானமா? என்ற ஒரே கேள்வியாக மாறியது. அப்போஸ்தலர் எழுதியவைகளில் (மறுஜென்மம்) மறுபடியும் பிறத்தல், ஞானஸ்நானம் ஆகியவை ஒரு பதத்திற்கு மற்றொரு பதம் உபயோகிக்கத் தக்க ஏறக்குறைய ஒரே அர்த்தம் கொண்டவையாயுள்ளன; சபையில் பூர்வீக சரிதை மூலம் நாம் அறிந்து கொள்ளும் தகவலின்படி குழந்தை ஞானஸ்நானத்தின் துவக்கத்தை இங்குதான் காண்கிறோம். இப்பகுதி தெளிவற்றதாயும், மிகவும் வேடிக்கையாயுமிருந்தாலும், இது இன்னும் தீர்வுகாணமுடியாத கேள்வியின் முதல் பாகம் ஆகும்; சபை சம்பந்தப்பட்ட கருத்துக்களை வைத்துப் பார்க்கும்போது பலவித கருத்து வேறுபாடுகளுக்கு இதுவே மூலக்காரணமாகும். மூடநம்பிக்கை கொண்டுள்ள மனதில் இப்படிப்பட்ட போதனை

உண்டாக்கிய விளைவு பெரிதாகும். தங்கள் குழந்தைககள் அவர்களுடைய ஆதி பாவத்தின் சாபத்தால் சாகாதபடிக்கு பெற்றோர் தங்களது இளங்குழந்தைகளை ஞானஸ்நானத்துக் கென்று துரிதமாகக் கொண்டு வந்தார்கள். ஆனால் உலக மனுஷனோ தான் ஞானஸ்நானம் எடுத்தபின், மீண்டும் கறைப்படாதபடிக்கும் மறுஜென்ம தண்ணீரை விட்டு வெளியே வரும்போது கலப்பற்ற பாக்கியத்திலும், சுத்தமான நிலைமைக்குள்ளும் பிரவேசிக்கும்படியாய்த் தனது மரண காலத்துக்கு சற்று முன்பு வரை ஞானஸ்நானத்தைத் தள்ளிப் போட்டு தாமதித்து வந்தான். குருமார் இத்தகைய பழக்கத்தை எதிர்த்துப் பேசியபொழுதிலும் அநேகர் தங்களுடைய ஞானஸ்நானத்தை தாமதிக்கச் செய்ததற்கு கான்ஸ்டன்டைன் அரசனின் முன்மாதிரியும் அவனுடைய கீர்த்தியுமே காரணம் எனலாம்.

## மற்ற சரித்திர ஆசிரியர்கள் கூறுவதென்ன?

இ.டி.பிரசன்ஸ் (E.D. Pressense) 'அப்போது கொடுக்கப்பட்டு வந்த ஞானஸ்நானக் கட்டளையைச் சரியாகப் புரிந்து கொள்ள, அக்கால சபைக்கும் தற்கால கிறிஸ்தவ சமுதாயத்துக்குமுள்ள வேற்றுமையை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதுள்ள கிறிஸ்தவ சமுதாயமானது ஒரு குறிப்பிட்ட பூகோள எல்லைக்குள் ஜீவிக்கிறவர்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கிறபடியினால் அது பிறப்புரிமையாகி விடுகிறது. மார்க்க சம்பந்தமான புள்ளி விவரமும் பூகோள எல்லையின்படியே கணக்கிடப்படுகிறது. ஞானஸ்நானமானது விசுவாசத்தின் வித்தியாசத்தைக் காண்பிப்பதற்குப் பதிலாய் ஏறக்குறைய பாதி சமூக சடங்காச்சாரமாய் மாறிவிட்டது. இந்நாட்களிலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட நாடுகளைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பா 'கிறிஸ்தவ ஐரோப்பா' என்று அழைக்கப்பட்டதையும் நாம் அறிகிறோம். இரண்டாம் நூற்றாண்டில் குழந்தை ஞானஸ்நானமானது ஒரு விதிவிலக்காய் இருந்தது. சபையும்

சாம்ராஜ்யமும் ஒன்றோடொன்று கலந்துவிட்ட பிற்பாடு அது ஒரு சட்டமாக மாறிவிட்டதே, இந்த எல்லா வேறுபாடுகளுக்கும் காரணமாகும். குழந்தை ஞானஸ்நானமானது அப்போஸ்தலர் காலத்திலிருந்தே தொடங்கியது என்று நிரூபிக்க முடியாது என்றாலும், ஏற்கனவே நாம் கண்டபடி, இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திலிருந்து குழந்தை ஞானஸ்நானத்தைக் குறித்து ஆராய்தல் அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் எல்லா சபையினரும் இதைக் கைக்கொள்ளத் தொடங்கினார்கள். தெர்த்துல்லியன் இவைகளுக்கு எதிர்த்து நின்றதே இவ்வுண்மைக்குப் போதிய சான்று ஆகும்.

## தெர்த்துல்லியன் (Tertullian) :

'ஞானஸ்நானத்தை, குறிப்பாக இளம்பிள்ளைகள் ஞானஸ்நானத்தை தாமதம் செய்வது நல்லது. அவர்கள் வயதுக்கு வரட்டும். தாங்கள் செய்யப்போவது இன்னதென்று அறிந்து அதை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு அவர்கள் வளரட்டும். இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்ள வல்லவர்களாகும் போது அவர்கள் கிறிஸ்தவர்களாய் மாறட்டும் பாவமன்னிப்பை இந்த இளம் வயதிலேயே ஏன் சுமத்த வேண்டும்? இவ்வுலக ஜீவியத்துக்கு அடுத்தவைகளில் மனுஷர் அதிக விவேகத்தோடு கிரியை செய்கிறார்கள். பூமிக்குரிய காரியங்களை வைத்துக் கொள்ள தகுதியற்றவர்களிடத்தில் பரம காரியங்களை ஏன் ஒப்படைக்க வேண்டும்?'

**வாடிங்டன் (Waddington) :**

'தொடக்க காலத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்களில் பெரும்பாலோர் வயதுக்கு வந்தவர்கள் மட்டுமல்ல, பரிசுத்த ஜீவியத்தை வாக்களிக்கிறதான மனந்திரும்புதலைப் பெற்றவர்களைத் தவிர வேறு யாரையும் தன் அங்கத்தினராக சேர்க்காத அளவுக்கு சபையானது ஞானமாயும், மிகவும் ஜாக்கிரதையாகவும் இருந்தது. பிற்காலங்களில் மூடநம்பிக்கையின் மிகுதியால் பொதுவாக ஏற்பட்ட ஒரு பிழையும், சுதந்தரிக்கப்பட்ட கேடான சுபாவத்தைக் கழுவும் செயலும் மனஸ்தாபப்படாத மீறுதல்களுக்கும் சேர்த்து ஒரு பொதுவான மன்னிப்பைக் கொண்டு வருகிறது என்ற எண்ணமுமாகிய இவ்விரண்டு வஞ்சகத்தினாலும் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் எவ்வித கிரியையும் செய்ய முடியவில்லை.'

**W.ஜோன்ஸ் (W.Jones) :**

'கிறிஸ்துவின் காலத்திலும் அவரது அப்போஸ்தலர் காலத்திலும் கொடுக்கப்பட்டு வந்ததான ஞானஸ்நானம் கொடுக்கும் முறையைப் பற்றி சொல்லப்பட்டது எதுவென்றாலும், அது குழந்தைக்கு ஆக்கிக் கொள்ளுவதற்கு புதிய ஏற்பாடு முழுவதிலும் கட்டளை இல்லை. முன் மாதிரியும் இல்லை. கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அது ஒரு கட்டளையாகத் துவங்கப்பட்டதில் ஞானஸ்நானமானது சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதோடு, அதை விசுவாசிப்பதோடும் பிரிக்க முடியாதபடி இசைந்து காணப்படுகிறது. நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (சுவிசேத்தின் மேல்) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்' (மாற்று 16:15,16). சீஷர்கள் கைக்கொண்ட முறைமையும் சகல அம்சத்திலேயும் அவர்களுடைய தெய்வீக எஜமான் அவர்களுக்கு இட்ட கட்டளைக்கு ஏற்றதாகவே இருந்தது. தங்களுடைய போதகத்தினால் ஏற்றதாகவே இருந்தது. தங்களுடைய போதகத்தினால்

சீஷராக்கப்பட்டவர்கள் தவிர வேறு யாருக்கும் அவர்கள் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. பெந்தெகோஸ்தே நாளில் பேதுரு யூதருக்குப் பிரசங்கித்தார். 'அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் (மாத்திரமே) ஞானஸ்நானம் பெற்றார்கள்...' (அப்.2:41). பிலிப்பு சமாரியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணினார். 'தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்வினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்' (அப். 8:12). எத்தியோப் பியாமந்திரியும் தனது விசுவாசத்தின் அறிக்கையின் பேரில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டான் (35-38 வசனங்கள்).

## வைட்லி ஸ்டோக்ஸ் (Whitely Stokes LL.D) :

'கிறிஸ்தவர்களின் குழந்தை ஞானஸ்நானமானது நாடோடிப் பாடலில் தான் தொடங்கியிருக்க வேண்டும். இவ்வித ஞானஸ்நானம் துவக்கத்தில் அஞ்ஞானிகளின் சுத்திகரிப்பு முறையாய் ஒரு வேளை தாயையும் சேயையும் சுத்திகரிக்கிற முறையாய் இருந்திருக்கலாம் என நான் யூகிக்கிறேன்' The Academy. Vol.XLIX) எனக் கூறுகிறார்.

# அதிகாரம்

# 4

# ஞானஸ்நானம் கொடுக்கும் முறை

யாவரும் ஒப்புக்கொள்ளும்படி 'பாப்டிஸம்' என்ற பதமானது 'முழுக்கு' அல்லது 'அமிழ்த்து' என்ற அர்த்தங்கொள்ளும் 'பாப்டைஸோ' என்ற கிரேக்க பதத்திலிருந்து வந்ததாகும்.

நாம் ஏற்கனவே மற்றொரு இடத்திலே கண்டது போல் யோவான் ஸ்நானன் தன்னால் குணப்பட்டவர்களின் சரீரங்களைத் தண்ணீரில் முழுக்கினான். 'தண்ணீர் மிகுதியாயிருந்த' ஓர் இடத்தை அவன் தெரிந்தெடுத்தான். ஏனென்றால் முழுக்கி ஞானஸ்நானம் கொடுக்கும் அந்த ஊழியத்தைச் செய்ய அவனுக்கு தண்ணீர் 'மிகுதியாய்' அவசியப்பட்டது.

இயேசுவும் யோவானால் யோர்தானில் ஞானஸ்நானம் (முழுக்கு) பெற்றார். அவர் யோர்தான் நதிக்குள் இறங்கினார் என்பதும் ஞானஸ்நானத்துக்குப் பின் தண்ணீரை விட்டுக் கரையேறினார் என்பதும் வெளிப்படையாயிருக்கிறது (மாற்.1:9,10) ஞானஸ்நானமானது தண்ணீரில் அடக்கபண்ணப்படுவதாகும் என்று பரி. பவுல் போதிக்கிறார். 'அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்' (ரோம.6:4). ஒரு மரித்த சரீரத்தின் மேல் ஒரு கைப்பிடி மண்ணைப் போடுவதானது அடக்கம் செய்வது என்று சொல்ல முடியாதது போலவே ஒரு ஆளின் மேல் சில துளி தண்ணீரைத் தெளிப்பதும் ஞானஸ்நானம் என்று அழைக்கப்பட முடியாது.

## சபை சரித்திர ஆசிரியர்களின் கருத்துக்கள் :

ஜான் வெஸ்லி ரோமர் 6:4-ஐ விமர்சிக்கும் போது, 'அது முழுக்கிக் கொடுக்கப்படும். பூர்வ முறையான ஞானஸ்நானம்' என்று பவுல் குறிப்பிடுவதாக உறுதிப்படுத்துகிறார் (Methodist Commentary).

கால்வின், 'ஞானஸ்நானம் கொடு' என்ற பதமே 'முழுவதுமாய் அமிழ்த்து' என்று அர்த்தங்கொள்ளும்; முழுவதுமாய் அமிழ்த்துகிறதான அவர்களது பழக்கம் சபையில் ஆதியிலேயே அனுசரிக்கப்பட்டது என்பது நிச்சயம்"

## ஆடிஸும் ஆர்னால்டும்

தங்கள் கத்தோலிக்க அகராதியிலே பின்வருமாறு கூறுகின்றனர். 'அப்போஸ்தலர் காலத்தில் ஞானஸ்நானம் பெறும் ஆளின் சரீரம் தண்ணீருக்குள் அமிழ்த்தப்பட்டது. ஏனென்றால் பரி. பவுல் இந்த முழுக்குதலைக் கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்படுவதற்கு அடையாளமாயிருக்கிறது எனக் கருதி, ஞானஸ்நானத்தை ஒரு ஸ்நானம் என்று பேசுகிறார். காப்ட்ஸ் (Copts), இஸ்டோரியன்ஸ் (Estorians) என்ற சபைப் பிரிவினர்கள் மத்தியில் இன்றும் முழுக்குதல் காணப்படுகிறது. அநேக காலமாக லத்தீனியரின் மத்தியிலும் இவ்விதமாகவே ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஏனெனில், இதைக் குறித்து 13-ம் நூற்றாண்டிலிருந்து பரிதோமாவுங்கூட (முதல் நூற்றாண்டு அப்போஸ்தலன் அல்ல) தன் காலத்தில் முழுக்கி ஞானஸ்நானம் கொடுப்பதே பொதுவான வழக்கம் என்கிறார்.'

## லூதர் பின் கண்டவாறு கூறுகிறார் :

'பாப்டிஸம்' என்பது கிரேக்க பதமாகும். இலத்தீன் பாஷையில் அது 'மெர்ஸியோ' (Mersio) என்று அழைக்கப்படுகிறது. அதற்கு முழுக்குதல் என்று அர்த்தம். நம்முடைய மத்தியில் பெரும்பாலும் இப்பழக்கம் வழக்கத்தில் இல்லாவிட்டாலும் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறவர்கள் முழுவதுமாய் முழுக்கப்பட்டு பின்பு வெளியே எடுக்கப்பட வேண்டும். இதுதான் அந்தப்பதத்தின் முழு அர்த்தம்.

நியாண்டர் (Neander) 'தொடக்கத்தில் ஞானஸ்நானமானது முழுக்குதலின் மூலம் தான் கொடுக்கப்பட்டது. பவுலின் அநேக

ஒப்புவமைகள் ஞானஸ்நானம் கொடுக்கும் இந்த முறையையே குறிக்கிறதாயிருக்கின்றன. முழுக்குதல், மரணத்துக்கும் கிறிஸ்துவுடன் அடக்கம்பண்ணப்படுதலுக்கும், தண்ணீரிலிருந்து வெளியே வருவது கிறிஸ்துவுடன் உயிர்த் தெழுவதற்கும் அடையாளமாயிருக்கிறது. இரண்டையும் ஒன்றாய்ச் சேர்த்து எடுக்கும்போது, அது பழைய மனுஷன் மரித்து, புதிதான ஜீவனுக்குள் உயிர்த்தெழுவதாகிய இரண்டாவது பிறப்பு என்று குறிப்பதாக இருக்கும்'

**W.ஜோன்ஸ் (W.Jones):**

'ஞானஸ்நானம் அப்போஸ்தலர் காலத்தில் முழுக்கியே கொடுக்கப்பட்டது. சிறிதளவு தண்ணீரே போதுமானதாயிருந்திருக்குமானால் யோர்தான் நதியிலும், 'தண்ணீர் மிகுதியாயிருந்தபடியால்' அயினோன் என்ற இடத்திலும் யோவான் ஞானஸ்நானம் கொடுத்தான் என்று பரிசுத்தாவியின் ஏவுதல் பெற்ற சரித்திராசிரியர் சொல்லியிருக்க

மாட்டார். ஞானஸ்நானம் கொடுப்பவரும் ஞானஸ்நானம் எடுப்பவரும் தண்ணீரில் இறங்குவதாயும் பின் அதினின்று வெளியே வருவதாயும் தான் விவரிக்கப்பட்டுள்ளது. நாம் கிறிஸ்துவுடன் அடக்கம்பண்ணப்பட்டு மறுபடியும் எழுப்பப்படுகிறோம் என்று பவுல் கூறுகிறபோது, அவர் முழுக்குதலைக் குறிப்பது மட்டுதல்லாமல், அதற்குப் பதிலாக நாம் வேறு எந்த முறைமையையும் யூகித்தாலும் அது அவர் உபயோகித்த உவமைக்குப் பொருந்தாது' எனக்கூறுகிறார். (ஜோன்ஸின் பிப்ளிகல் சைக்கோபீடியா (Jones Biblical Cyclopedia)

இ.ர்.பிரசன்ஸ் (E.de Pressence), ‘முழுக்கல்’ என்று அர்த்தங்கொள்ளும் ‘பாப்டிஸம்’ எனும் வார்த்தையே புதிதாய் மதத்தில் சேர்ந்தவர்களை முழுக்குவது என்று காட்டுவதாய் இருக்கிறது. அந்த சாக்கிரமெந்து சில வேளை தண்ணீர் அல்லது கழுவுதல் என்றோ அல்லது ஊற்று என்றோ அழைக்கப்படுகிறது. இந்த வார்த்தைகளுக்கு அவைகளின் இயல்பான அர்த்தங்கட்கு அப்பால் ஓர் ஆவிக்குரிய மறைவான கருத்து உண்டு. அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு மறுஜென்ம முழுக்கைப் பற்றி கூறுகிறார். இதற்குச் சமமான பல வார்த்தைகள் இன்னும் வேதத்திலுண்டு.

## ஜஸ்டின் மார்டையர் (Justin Martyr) :

‘நாங்கள் போதித்தவை சத்தியத்திற்கொத்ததாய் உள்ளன என்று முழு நிச்சய முள்ளவர்களையும், கிறிஸ்தவ ஜீவியத்திற்கென்று தங்களைத் தத்தம் செய்தவர்களையும், உபவாசத்தோடும் ஜெபத்தோடும் தேவனைத் தேடவும் அவர்கள் செய்த பாவங்களுக்கு மன்னிப்பைத தேடவும் அழைக்கிறோம். நாங்களும் அவர்களோடு சேர்ந்து உபவாசித்து ஜெபிக்கிறோம். பின்பு தண்ணீருள்ள இடத்திற்கு அவர்களை அழைத்துச் செல்கிறோம். அங்கே, நாங்கள் பெற்றது போலவே அவர்களும் தங்கள் மறுஜென்மத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் அங்கே தண்ணீரில் அமிழ்த்தப்படுகிறார்கள்...’.

# அதிகாரம்

## 5

# ஞானஸ்நானத்தில் சம்பவிப்பது என்ன?



முழுக்கு ஞானஸ்நானத்தை ஆதரிக்கிறவர்கள், இப்படிப்பட்ட ஞானஸ்நானம் கீழ்படிதலின் கிரியை மட்டும் தான் என்றும், கிறிஸ்துவிலுள்ள தனது விசுவாசத்தின் மூலமாய் ஒரு விசுவாசி தன் இருதயத்தில் அனுபவிக்கும் உள்ளான மாற்றத்தின் புறம்பான அடையாளம் என்றும் சொல்லுகிறார்கள். இது முற்றிலும் சரியானதல்ல. மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி உண்மையாகவே தன் புதிய அனுபவங்களைக் குறித்து சந்தோஷமாயிருப்பான் என்பது நாம் ஒத்துக்கொள்வதே. என்றாலும் ஞானஸ்நானமானது நம் ஆண்டவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிற ஒரு செயலும், அடையாளமுமாய் இருப்பதுடன், நமக்கு புதிய ஆசீர்வாதங்களைக் கொண்டுவரவும் செய்கிறது; மேலும் ஒரு மேலான அனுபவத்துக்கும், ஆழமான ஜீவியத்துக்கும் அது நம்மை ஆயத்தப்படுத்துகிறது. புதிய ஏற்பாடு ஞானஸ்நானத்தில் நாம் அடையும் பயன்களைக் கீழே பார்ப்போம்.

## 1. தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க ஞானஸ்நானம் ஒரு படியாகும்.

ஒரு 'பிறப்பு' என்று கிறிஸ்து குறிப்பிடுகிறதான தண்ணீர் ஞானஸ்நானம், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க ஒரு அத்தியாசியமான படியாக இருக்கிறது. 'இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' (யோவா.3:5) என்றார்.

## 2. தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் பாவசுபாவத்திற்கு மரிக்கிறோம்.

ஒரு மனுஷன் மறுபடியும் பிறந்திருந்தாலும், அவன் இன்னும் பாவ சுபாவத்திலிருந்தும் 'இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்' (சங். 51:5) என்று தாவீது குறிப்பிடுகிற கீழ்ப்படியாமை, முரட்டாட்டம்

முதலிய இயல்பாகவே உள்ள ஆதாமின் சுபாவத்தினின்றும் விடுதலையில்லாதிருக்கிறான். ''ஒரே மனுஷனுடைய (ஆதாரமுடைய) கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல்" (ரோமர். 5:19) என்று பரி. பவுல் கூறுகிறார். இந்த வசனமானது ஒவ்வொரு மனுஷனுக்குள்ளும் இருக்கிற பாவசுபாவத்தையே குறிக்கிறதாயுள்ளது.

ஞானஸ்நானத்தின் ஆழமான சத்தியத்தை தேவனிடத்திலிருந்து வெளிப்படுத்தலாகப் பெற்ற பவுல், இஸ்ரவேல் புத்திரர் செங்கடலைக் கடந்த சம்பவத்தை ஞானஸ்நானத்தோட ஒப்பிட்டுப் பேசுகிறார். அதில் மறைந்துள்ள வெளிப்படுத்தலின் ஆழத்தைக் காணும் போது அது நம்மைப் பிரமிக்கச் செய்கிறது. 'இப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் எவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்' (1கொரி. 10:1,2) என்று பரி. பவுல் கூறுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தார்கள் (யாத். 12:27). ஆனாலும் அவர்களை பின் தொடர்ந்து வந்ததான பார்வோனின் சேனைகளிலிருந்து அவர்களுக்கு இன்னொரு விடுதலை தேவையாயிருந்தது (யாத். 14:9,10).

இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வரும்படி பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்ட அன்று இராத்திரியிலே மிகப்பெரிய அற்புதம் செய்த தேவன் மறுபடியும் அதற்குச் சமமான இன்னொரு அற்புதத்தையும் நிகழ்த்த வேண்டியிருந்தது. அது இந்த முறை எகிப்திலிருந்து விடுவிப்பதற்கல்ல. அவர்களைத் தொடர்ந்து வந்த எகிப்திய சேனையிலிருந்து விடுவிக்கவே அந்த அற்புதம் நடத்த வேண்டியதாயிருந்தது. அவர்களைப் பார்த்து, மோசே

'பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்' (யாத். 14:13) என்று சொன்னான். தேவன் அவர்களுக்கு இரண்டாவது இரட்சிப்பை வாக்குப்பண்ணினார். அது சிவந்த சமுத்திரத்தில் நிகழ்ந்தது. அந்த இரட்சிப்பு எகிப்தியரை முழுவதும் அழித்து இஸ்ரவேல் புத்திரருக்கு பூரண விடுதலையைக் கொண்டு வந்தது.

அவ்வண்ணமே மறுபடியும் பிறந்த ஒரு விசுவாசி, கல்வாரியில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக (பாவத்தின் ஆளுகை அல்லது ஆவிக்குரிய பிரிகாரம் எகிப்திலிருந்து) கிடைக்கும் விடுதலையை நிச்சயமாகவே அனுபவித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் தண்ணீர் ஞானஸ்நானத்திலே, தொடர்ந்து வரும் எகிப்தின் சேனை போல தனக்குள்ளே யுத்தம் செய்கிற பாவ சுபாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறதாகிய இன்னொரு அற்புதமான இரட்சிப்பை அவன் அனுபவிக்கிறான். இப்பாவ சுபாவம் அவனோடு போராடிக் கொண்டிருந்தது. இது இஸ்ரவேலரைப் பின்தொடர்ந்த எகிப்தியரின் சேனைகளுக்கு ஒப்பாயிருக்கிறது. ஆகையால் ஞானஸ்நானத்தில் அனுபவமாக்கப்பட வேண்டிய இன்னொரு இரட்சிப்பு உண்டு. ஆகவே தான் 'விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்' என்று இயேசு சொன்னார்.

## நோவாவின் ஜலப்பிரளயம்

ஞானஸ்நானத்தில் அடங்கியுள்ள (இன்னொரு) இரட்சிப்பின் இரகசியத்தை பேதுரு வெளிப்படுத்தும் போது அவர் வேறொரு உவமையை உபயோகிக்கிறார். எட்டு பேர்கள் மாத்திரமே இரட்சிக்கப்பட்ட நோவா காலத்து பிரளயத்தோடு ஞானஸ்நானத்தை ஒப்பிடுகிறார். நோவாவின் சந்ததியில் பாவிகளை அழிக்க தேவன் அனுப்பிய அதே ஜலப்பிரளயத்திலிருந்து தான் நோவாவையும் அவன் குடும்பத்தினரையும் அவர் காப்பாற்றினார். அப்படியே பேதுருவும், 'அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, (மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படின்னையாயிருந்து) இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது' (1பேது. 3:21) என்று உறுதியாய்க் கூறுகிறார்.

## 3. பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற ஆயத்தப்படுத்தும் ஒரு படியே ஞானஸ்நானம்

2-ம் பகுதியில் விளக்கப்பட்டிருக்கிறபடி, பாவசுபாவம் நீக்கப்படுவது பரிசுத்தாவியைப் பெறுவதற்கு அவசியமாயிருக்கிறது. அதன் காரணம் தெளிவாக இருக்கிறது. பரிசுத்தாவியானவர் நமக்குள்ளே வாசம் பண்ணும்படியாய் மட்டுமல்ல, சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்தவும், நம்மை முழுவதும் பரிசுத்தமாகவும், அவரது பூரண சித்தத்தை நாம் செய்ய நமக்குப் போதிக்கவும் நம்மை இவ்விதமாய் ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வரும்படியாகவும் வருகிறார் (யோவா. 16:13; ரோம. 8:13,14; 1பேது.1:2) முரட்டாட்டமும் கீழ்படியாமையும் எங்கே உண்டோ

அங்கே பரிசுத்தாவியானவர் இந்தப் பரிசுத்தமாகுதலின் கிரியைகளைச் செய்ய முடியாது. ஒன்று பாவசுபாவம் நம்மை ஆளுகை செய்ய வேண்டும் அல்லது பரிசுத்த ஆவியானவர் ஆளுகை செய்ய வேண்டும். ஞானஸ்நானத்தில் பாவ சுபாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள், பரிசுத்தாவியானவரால் நடத்தப்பட்டு, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு பரிசுத்தாவியைப் பெற்றுக் கொள்ளும்படியாக சரீரத்திலும், ஆத்துமாவிலும், ஆவியிலும் ஆயத்தம் பண்ணப்படுகின்றனர். ஆகவே தான் பேதுருவும், 'மனந்திரும்பி', 'ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்', 'அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார்' (அப்.2:38).

## 4. வசனத்தின் மூலமாக வரும் பரிசுத்தம் ஞானஸ்நானத்தில் தொடங்குகிறது.

முரட்டாட்டமும் கீழ்ப்படியாமையுள்ள ஆதாமின் சுபாவம் தேவ சித்தத்திற்கு எதிரிடையாயிருக்கிறது. தேவசித்தத்திற்கு விரோதமாய்ப் பாவசுபாவத்தின் முரட்டாட்டத்தைக் குறித்து பவுலின் அறிக்கையையே காண்போம். 'உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் (தேவசித்தத்தின்) மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு (தேவனுடைய பிரமாணத்துக்கு கீழ்ப்படிவதில் பிரியப்படுகிற பிரமாணத்துக்கு) விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்கிறது' (ரோம்.7:22,23). தேவனுடைய பிரமாணத்தில் அல்லது தேவனுடைய வசனத்தில் வாஞ்சையாயிருக்க பவுல் விரும்பியும் அவருடைய உள்ளான வாஞ்சைகளுக்கு விரோமாய் அவருக்குள்ளிருந்த ஆதாமின் பாவசுபாவமானது அதை எதிர்த்து நின்று அவருடைய ஜீவியத்தில் தோல்வியைக் கொண்டு வந்தது.

ஞானஸ்நானத்தில் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிற ஒரு செய்கையினால் முதல் மனுஷனாகிய ஆதாம் ஏதேன் தோட்டத்தில் காட்டிய கீழ்ப்படியாமையாகிய செயலை பலனற்றதாய் மாற்றி விடுகிறோம். அவன் மூலமாகவே அவனது சுபாவமாகிய கீழ்ப்படியாமையை நாம் சொந்தமாக்கிக் கொண்டோம். அதே சமயத்தில் நாம் கிறிஸ்துவின் மரணத்தில் பங்குகொள்ளும் அனுபவமான ஞானஸ்நானத்தின் மூலமாக தேவசித்தத்தை பரிபூரணமாகச் செய்த கிறிஸ்துவின் சித்தத்தில் நாம் பங்கு பெறவும் செய்கிறோம். ஆகையால் பவுல் 'இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்த (தேவசித்தத்தை பூரணமாய் செய்த) சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம்' என்று கூறுகிறார். (தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ, வருகிறேன் என்று சொன்னபோது தேவசித்தத்துக்கு பூரணமாய்க் கீழ்ப்படிந்த) கிறிஸ்துவின் சித்தமானது தண்ணீர் ஞானஸ்நானத்தில் நமது சுபாவமாகி விட்டது. தண்ணீர் ஞானஸ்நானத்துக்குப் பிற்பாடு தேவ சித்தத்தை வெளிப்படுத்துகிறதான வேத வசனத்தில் பிரியமாயிருக்கும்படி புதிய கிருபையை ஒருவன் கண்டடைகிறான். அதற்குப் பின்பு தேவனுடைய வசனமானது நம்மை பரிசுத்தப்படுத்த ஆரம்பிக்கிறது.

## 5. ஞானஸ்நானத்தில் ஜெபஜீவியத்திற்காக ஒரு திட அஸ்திபாரம் உருவாக்கப்படுகிறது.

மனந்திரும்புதலில் பாவத்தின் ஆளுகையிலிருந்தும் தண்ணீர் ஞானஸ்நானத்தில் முரட்டாட்டமான பாவசுபாவத்திலிருந்தும் நாம் விடுவிக்கப்பட்டிருந்தாலும் அது ஜெயஜீவியம் அல்ல. பரிசுத்த

ஆவியின் வல்லமையால் ஜெபஜீவியம் செய்வது சாத்தியம் என்ற இடத்துக்கு ஞானஸ்நானமானது நம்மைக் கொண்டு வருகிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து அவர்களைத் தொடர்ந்து வந்த சேனைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டதோடு தேவன் திருப்திப்படவில்லை. இந்த அடிமைகளை வனாந்தரத்தில் படிப்படியாய் சோதித்து ஒரு பலத்த சேனையாக்கி, இவர்கள் கானான் தேசத்தில் சகல ஜாதிகளுடனும் யுத்தம் பண்ணி அவர்களை ஜெயித்து தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள வேண்டுமென்பதே தேவனுடைய மேலான கரிசனையாயிருந்தது. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினாலும், நம் இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கும் தேவ அன்பினாலும் சகலவித பரீட்சைகளையும், சோதனைகளையும் நாம் ஜெபித்து, 'நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே' (ரோம். 8:37).

## 6. சபை எடுத்துக் கொள்ளப்படும் வேளையில் சரீரம் உயிர்த்தெழுவதற்கு (மறுரூபமடைவதற்கு) ஞானஸ்நானம் ஒரு அத்தியாவசியமான படியாகும்.

'ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலிலும் (சாயலிலும்) இணைக்கப்பட்டிருப்போம்' ரோம. 6:5). மூல கிரேக்க பிரதியில் 'சாயல்' என்ற வார்த்தை இல்லை. நாம் உண்மையாகவே அடக்கம்பண்ணப்படுவதற்கு ஞானஸ்நானம் எத்தனமாயிருப்பதாய் தேவன் அங்கீகரிக்கிறார் என்பதை இது உறுதிப்படுத்துகிறது. இந்தப்படியின் மூலம் நம்முடைய தற்போதைய சரீரம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் எழுத்தின்படியே உயிர்த்தெழுவதற்காக பரிசுத்தாவியால் குறிக்கப்பட்டு வைக்கப்படுகிறது.

# அதிகாரம்

## 6

# ஞானஸ்நானக் கட்டளை

'அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்' (மத். 28:18-20).

சில கிறிஸ்தவ பிரிவினர், சபையில் இயேசு வைத்துள்ள தான மேற்கண்ட ஞானஸ்நானக் கட்டளையை மாற்றி, அப்போஸ்தலர் நடபடிகளில் காணப்படும் ஞானஸ்நானங்கள் எல்லாமே இயேசுவின் நாமத்திலே தான் கொடுக்கப்பட்டதென வாதாடிக் கொண்டு ஒன்றுமறியாத விசுவாசிகளுக்கு 'இயேசுவின் நாமத்தில் மாத்திரம்' மறுபடியும் ஞானஸ்நானம் கொடுக்கத் துவங்கியிருக்கிறார்கள்.

## கீழ் வருபவை அவர்கள் தர்க்கத்தின் முக்கியமான குறிப்புகள் :

1. மத். 28:19-ல் காணப்படும் (பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் கொடுக்கும் ஞானஸ்நான) கட்டளையை உறுதிப்படுத்த புதிய ஏற்பாட்டில் வேறு வசன அத்தாட்சியே இல்லை. ஆகையால் அது நிராகரிக்கப்பட வேண்டியது.

2. பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் ஆதி சபையில் இயேசுவின் நாமத்தில் மட்டுமே ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கமாயிருந்தது.

3. 'பிதா', 'குமாரன்', 'பரிசுத்த ஆவி' என்னும் வார்த்தைகள் பெயர்களாயிராமல் பட்டங்களாயிருக்கிறபடியால் 'பிதா', 'குமாரன்', 'பரிசுத்த ஆவி' க்குப் பெயர் தான் இயேசு. இவ்விதமாய் 'பிதா', 'குமாரன்', 'பரிசுத்த ஆவி' மூவரல்ல; இயேசுவாகிய ஒருவரே என்று

அவர்கள் தீர்மானிக்கிறார்கள். இன்னொரு விதத்தில் சொன்னால் அவர்கள் திரித்துவத்தை மறுதலிக்கிறார்கள்

4. புதிய ஏற்பாட்டின் ஞானஸ்நானமானது பழைய ஏற்பாட்டின் விருத்தசேதனத்திற்கு ஒத்திருக்கிறது: ஆகையினால் சரியான ஞானஸ்நானக் கட்டளையோடு ஞானஸ்நானம் பண்ணப்படாத கிறிஸ்தவன் ஆவிக்குரிய 'விருத்தசேதனம்' பண்ணப்படவில்லை.

5. மேற்சொல்லிய காரணங்களால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் இந்த தர்க்கங்களை நாம் ஆராய்வோம்.

1-ம் தர்க்கம் : மத். 28:19-ல் காணப்படும் (பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் கொடுக்கும் ஞானஸ்நானம்) ஞானஸ்நானக் கட்டளையை உறுதிப்படுத்த புதிய ஏற்பாட்டில் வேறு வசன அத்தாட்சியே இல்லை. ஆகையால் அது நிராகரிக்கப்பட வேண்டியது.

இந்தத் தர்க்கத்தை ஸ்தாபிக்க விரும்புகிறவர்கள் உபா. 19:15-ஐயும், மத். 18:16-ஐயும் குறிப்பிடுகிறார்கள். 'ஒருவன் எந்த அக்கிரமத்தையாவது எந்தப் பாவத்தையாவது செய்தான் என்று சொல்லப்பட்டால் ஒரே சாட்சியினால் நியாயந் தீர்க்கக் கூடாது; இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் காரியம் நிலைவரப்பட வேண்டும் என்ற கொள்கை உபயோகப்படுத்த வேண்டும் என்ற உண்மையைக் கண்சாடையாக விட்டுவிடுகிறார்கள். தேவனைப் பொறுத்த வரையில் 'தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்' (நீதி. 30:5). அவர் 'பொய்யுரையாத தேவன்' (தீத்து 1:3). 'வேத வாக்கியங்களெல்லாம்... உபதேசத்துக்கு(ம்)... பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது' (2தீமோ. 3:16,17). ஆகையால் இயேசு மத். 28:19-ல் சொல்லிய வார்த்தைகள்

வேதத்தில் ஒரு இடத்தில் மட்டும் காணப்படுவதால் அவைகள் அர்த்தமற்றது என்று நாம் கணித்து விட முடியாது. இப்போதும் வேத பண்டிதர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நம்மிடமுள்ள மூல கிரேக்க பிரதிகள் எல்லாவற்றிலும் மத். 28:19-ம் வசனமானது இப்போதுள்ளபடியே இருக்கிறது.

வேதத்தில் ஒரே ஒரு முறை மாத்திரம் கூறப்பட்டிருக்கும் எத்தனையோ முக்கியமான சம்பவங்களும் உவமைகளும் உபதேசங்களும் உண்டு. ஆனால் அவை எல்லாவற்றையும் தேவனுடைய வார்த்தை என்றே நாம் ஏற்றுக் கொள்கிறோம். கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே நடந்த கலியாணம் (யோவா. 2:1-11), சமாரிய ஸ்திரீயின் குணப்படுதல் (யோவா.4:1-26) போன்ற சம்பவங்களும், களைகளும் கோதுமையும் (மத்.13:24-30), கெட்டகுமாரன் (லூக்.15:11-32) போன்ற உவமைகளும், கிறிஸ்துவுக்குள் பூரணமாக்கப்பட்டவர்கள் இயேசுவைச் சந்திக்க மத்திய ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவர் (1 தெச.4:17) என்ற உபதேசமும் ஆவியின் வரங்களைப் பற்றிய உபதேசமும் (1கொரி. 12-ம் அதிகாரம்) இன்னும் அநேக அரிய வேத பகுதிகளும் வேதத்தில் ஒரே ஒரு முறை மட்டும் சொல்லப்பட்டுள்ளன. அவையெல்லாவற்றுக்கும் வேதத்தில் வேறு வசன அத்தாட்சி இல்லாத படியால் அவை பொய்யானவை என்று அவைகளை ஒதுக்கி வைத்துவிட முடியுமா?

## 2-ம் தர்க்கம் : பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் ஆதிக சபையில் இயேசுவின் நாமத்தில் மட்டுமே ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கமாயிருந்தது.

தம்முடைய அப்போஸ்தலரிடம் இயேசு சொன்ன கடைசி வார்த்தைகளில் அவர்கள் 'புறப்பட்டுப் போய்... சீஷராக்கி... பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க' வேண்டும் என்று தெளிவாகக் கட்டளையிட்டார். அது மட்டுமல்லாமல், "நான் உங்களுக்குக்

கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி" அவர்களுக்கு உபதேசம் பண்ண வேண்டும் என்று சொன்னார். இப்படிப்பட்ட கட்டளை பெந்தெகொஸ்தே நாள் வரைக்கும் தான் என்று அவர் சொல்லவே இல்லை. அதற்கு மாறாக 'அவர்கள் புறப்பட்டுப் போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூட கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்' (மாற். 16:20). நியமிக்கப்பட்ட ஒரு கால வரம்புக்குப்பின் ஞானஸ்நானக் கட்டளையில் ஏதாவது மாற்றம் செய்யப்பட வேண்டுமென்று இருந்தால், அதைக் குறித்து ஒரு வெளிப்பாட்டின் மூலமோ அல்லது ஒரு சொப்பனம் அல்லது தரிசனம் மூலமோ, ஒரு

தேவ தூதனுடைய ஊழியத்தின் மூலமோ தனது அப்போஸ்தலருக்கு அவர் சொல்லியிருந்திருப்பார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமென்று இயேசு ஆதியில் கொடுத்த கட்டளையை மீறுவதற்கு வேதத்தில் கூறப்பட்ட ஏதாவது சம்பவங்கள் மூலம் ஆதாரம் நமக்கு உண்டா? இல்லை, அப்படிப்பட்ட ஆதாரம் ஒன்றும் இல்லை. ஆகையால் இயேசுவின் பரமேறுதலுக்குப்பின் அவரது சீஷர்கள் ஞானஸ்நானக் கட்டளையையே மாற்றிவிட்டார்கள் என்று வீணான கற்பனை செய்வது அர்த்தமற்றதாகும். இதற்கு மாறாக அப்போஸ்தலரோ கர்த்தராகிய இயேசுவின் கட்டளைகளை அப்படியே கைக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை தங்கள் அனுபவங்களின் வாயிலாக கற்றிருந்தார்கள். ஏனென்றால், 'நான் சொல்லிய இந்த

வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்' (மத்.7:24) ; 'என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்ளுவான்' (யோவா.7:16,17) என்று இயேசு கூறிய வார்த்தைகளை அடிக்கடி அவர்கள் கேட்டிருந்தார்கள். ஆகையினால் சீஷர்கள் இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளை அப்படியே கைக்கொண்டு தங்கள் மூலம் குணப்பட்டவர்களுக்கு 'பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே' ஞானஸ்நானங் கொடுத்தார்கள் என்று நிச்சயித்திருக்கிறோம்.

## என் நாமத்தினாலே

தம் சீஷர்கள் தம்முடைய நாமத்தினால் ஜெபிக்க வேண்டுமென்றும் (யோவா.14:13), மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் அவருடைய நாமத்தினால் பிரசங்கிக்கப்பட வேண்டுமென்றும் (லூக். 24:47), அவருடைய நாமத்தினால் வியாதியஸ்தரைக் குணமாக்கவும் பிசாசுகளைத் துரத்தவும் வேண்டுமென்றும் (மாற். 16:17,18) அவர்களுக்கு இயேசு தெளிவாகப் போதித்தார் என்பதை நாம் மறுக்கவில்லை என்றாலும் அவர்கள் மூலமாய்க் குணப்பட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கெடுக்கும் கட்டளையை அவர்களுக்குக் கொடுத்தபோது, புதிதாக விசுவாசித்தவர்களுக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்கும்படி திட்டமாகவும் பிரத்தியேகமாகவும் சொன்னார். ஞானஸ்நானத்தைக் குறித்து மட்டும் இப்படிப்பட்ட ஒரு பிரத்தியேகமான கட்டளையைக் கொடுத்ததில் ஒரு தெய்வீக காரணம் இருந்திருக்க வேண்டும். அவருடைய சீஷர்கள் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமற் போய்விட்டார்களா? நிச்சயமாகவே இல்லை. 'இயேசுவின் நாமத்தில்'

என்ற வார்த்தைகளை நாம் கவனமாய்ப் படித்தால், அது தாங்களால் குணப்பட்டவர்கள் ஆதியில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு ஆயத்தப்படுவதற்கு முன் அவர்களை மனந்திரும்புதலுக்குக் கொண்டு வருவதற்காக அவர்கள் செய்த முழு ஊழியத்தைக் குறிக்கிறதாயிருக்கிறது. 'மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசேலம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது' (லூக். 24:47) என்று இயேசு தாமே சொன்னதை நாம் மனதில் வைத்திருப்போம். இவ்வசனத்தில் காணப்படும் முக்கியத்துவம், அவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்பதிலல்ல. ஆனால் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பையும் மனந்திரும்புதலையும் பிரசங்கிப்பதிலேயே தங்கியிருக்கிறது.

3-ம் தாக்கம் : 'பிதா' 'குமாரன்' 'பரிசுத்த ஆவி' என்னும் வார்த்தைகள் பெயர்களாயிராமல் பட்டங்களாயிருக்கிறபடியால், 'பிதா' 'குமாரன்' 'பரிசுத்த ஆவிக்கும்' பெயர்தான் 'இயேசு' இவ்விதமாய் 'பிதா' 'குமாரன்' 'பரிசுத்த ஆவி' மூவரல்ல, இயேசுவாகிய ஒருவரே என்று அவர்கள் தீர்மானிக்கிறார்கள். இன்னொரு விதத்தில் சொன்னால் அவர்கள் திரித்துவத்தை மறுதலிக்கிறார்கள்.

(i) பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் உரிய ஒரே பெயர் 'இயேசு' என்று நாம் தீர்ப்போமானால் 'பிதா' என்பதும் 'குமாரன்' என்பதும் 'பரிசுத்த ஆவிக்கும்' என்பதும் ஒரே ஒரு ஆள் என்னும் பிழையான போதனையை அது உறுதிப் படுத்துகிறதாயிருக்கும். அவர்கள் அவ்விதம் ஒருவராய் இருக்கிறார்களா? என்பதும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற வார்த்தைகளுக்கிடையில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள 'உம்' (and) எனும் இணைப்புச் சொற்கள் (ஆங்கில வேதாகமத்தில்) அவர்கள் மூன்று பேராய் இருக்கிறார்கள் என்று நிரூபிக்கிறது. பிதாவுக்கென்று ஒரு சொந்தப் பெயர் இருந்ததென்று இயேசு தாமே போதித்தார். 'நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும்' (யோவா 5:43);

'பிதாவே ... நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்...' (யோவா.17:5,6) இந்த வேதாகமத்திலுள்ள வசனங்களைப் பார்த்த மாத்திரத்திலேயே குமாரனும் பிதாவும் வெவ்வேறு 'நபர்கள்' என்று விளங்குகிறது. இல்லாவிட்டால் அந்த வார்த்தைகள் அர்த்தமற்றதாயிருக்கும். இரண்டாவதாக, இயேசு 'உம்முடைய (பிதாவின்) நாமத்தை வெளிப்படுத்தினேன்' (யோவா. 17:6) என்று கூறுகிறார். இதிலிருந்து பிதா என்னும் வார்த்தை ஒரு பட்டம் மட்டுமல்லாமல் பெயருமாயிருக்கிறது என்றும், கிறிஸ்து பிதாவை நாமத்திலும் சுபாவத்திலும் பிதாவாக வெளிப்படுத்தினார் என்றும் பொருள்படும். பூமிக்குரிய பிதாக்கள் அநேகம் பேருண்டு. ஆகையால் மனுஷீகத் தகப்பன் ஒவ்வொரு வருக்கும் தனிப்பெயர் இருக்க வேண்டும். ஆனால் நமக்கோ 'எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், .... இருக்கிறவர்' (எபே. 4:6) பரிசுத்த ஆவியானவரைக் குறித்தும் இதே விதமாகத் தர்க்கிக்கலாம்.

(ii) இயேசு என்பது தேவகுமாரனுடைய பூமிக்குரிய பெயர் மட்டுமே. இயேசு என்பதற்கு 'இரட்சகர்' என்று அர்த்தம். 'ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்' (மத். 1:21). அந்த அர்த்தத்தில் தான் 'நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை' (அப். 4:12) என்று எழுதப்பட்டுள்ளது. இயேசு தான் பூமியில் அல்லது சூரியனுக்குக் கீழே ஏக இரட்சகர் என்றும், 'இயேசு' என்பது ஒரு பூமிக்குரிய பெயர் என்றும் நிரூபிக்க இந்த இரண்டு

வேதபகுதிகள் போதுமானவை. ஆகையால் தான் அவர் 'நசரேயனாகிய இயேசு என்று அழைக்கப்பட்டார். இரண்டாவதாக, இயேசு என்ற பூமிக்குரிய பெயர் அவர் பூமியில் செய்த ஊழியத்துக்காக மட்டும் இருந்தபடியால் அவர் ஒரு 'புதிய நாமத்தை', ஒரு 'விசேஷித்த நாமத்தை', பரலோகத்தில் 'எல்லாம் நாமத்திற்கும் மேலான (ஒரு) நாமத்தை'ப் பெற்றார் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது (வெளி. 3:12; எபி.1:4; பிலி. 2:11). ஆகவே 'இயேசு' என்ற பெயர் பிதாவையோ அல்லது பரிசுத்த ஆவியையோ குறிக்க முடியாது.

(iii) 'இயேசு' என்ற பெயர் கிறிஸ்துவுக்கு அவருடைய சரீரத்துக்குரிய பிறப்பிக்கு முன் அருளப்பட்டிருக்கவில்லை. அவருடைய அவதாரத்துக்கு முன் அவர் 'வார்த்தை' அல்லது 'குமாரன்' (யோவா. 1:1; சங்.2:12) அல்லது வேறு பெயராலேயே அறியப்பட்டிருந்தார். அப்படியானால் 'இயேசு' என்ற பெயர் எப்படி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைக் குறிக்க முடியும்?

(iv) 'இயேசு' என்ற பெயர், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைக் குறிக்கும் மொத்தப் பெயர் என்று கூற வேதம் முழுவதிலும் ஒரு வசனமும் அத்தாட்சியாக இல்லை. மாறாக அப்போஸ்தலர் அவர்களைக் குறித்துப் பேசும்போது, தனித் தனியாகவே பேசியது மட்டுமல்லாமல், 'இயேசு' என்ற பெயரைத் திரித்துவத்தில் இரண்டாவது ஆளாகிய கிறிஸ்துவுக்கு மட்டுமே உபயோகிப்பதில் மிகவும் கவனமாயிருந்தார்கள் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

'நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக' (1 கொரி 1:3).

'மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசு கிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும் அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்' (கலா.1:1).

'தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது' (2 பேது. 1:2) என்று பேதுரு உரைக்கிறார்.

புதிய ஏற்பாட்டின் ஞானஸ்நானமானது பழைய ஏற்பாட்டின் விருத்தசேதனத்துக்கு ஒத்திருக்கிறது. ஆகையால் சரியான ஞானஸ்நானக் கட்டளையோடு ஞானஸ்நானம் பண்ணப்படாத கிறிஸ்தவன் ஆவிக்குரிய 'விருத்தசேதனம்' பண்ணப்படவில்லை.

'ஞானஸ்நானம்' எந்த இடத்திலும் 'விருத்தசேதனம்' என அழைக்கப்படவில்லை. ஆனால் அது 'மரணம்' என அழைக்கப்படுகிறது (ரோம். 6:4; கொலோ.2:12). அடக்கத்துக்கு முன்பே (ஞானஸ்நானத்துக்கு முன்) 'பழைய மனுஷன்' சிலுவையில் அறையப்பட்டு அடக்கத்துக்கு ஆயத்தம்பண்ணப்பட வேண்டும் (ரோம. 6:6) கிறிஸ்துவுக்குள் உள்ள விசுவாசி தண்ணீர் ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப்படுமுன், பழைய மனுஷன் சிலுவையிலறையப்படுவது மனந்திரும்புதலையும் பாவத்தைக் களைந்து போடுவதையும் குறிக்கிறது என்பது தெளிவாயிருக்கிறது. இதே கருத்தைத் தான் கொலோ. 2:11-லும் காண்கிறோம். அங்கே, 'கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே (மனந்திரும்பி பாவங்களைப் என்றென்றைக்குமாய் விட்டுவிடும் எண்ணத்தோடு பாவ அறிக்கை செய்வது) மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்து' போடுவதையே விருத்தசேதனம் குறிப்பதாகப் பவுல் கூறுகிறார். இதன் பின்னர், அவன் ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்படுகிறான். ஆகையால் விருத்தசேதனத்துக்கும் ஞானஸ்நானத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்று தீர்க்கிறோம்.

## பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நான பெற்ற அனைவரும் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டும்.

1. ஞானஸ்நானக் கட்டளையின் வார்த்தைகளின் மாற்றத்தின்

காரணமாக ஞானஸ்நானம் திரும்பக் கொடுக்கப்பட்டதாக புதிய ஏற்பாட்டில் ஒரு சம்பவமும் கிடையாது. ஆனால் அப். 19:1-7ல் ஞானஸ்நானம் திரும்பக் கொடுக்கப்பட்ட ஒரு சம்பவத்தைக் காண்கிறோம். ஏனெனில், பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின், ஆழமான சத்தியங்களோடு வெளிப்பட்ட புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் வந்துவிட்டதால் யோவானுடைய ஞானஸ்நானம் அதற்குப் பின் செல்லாமறபோய் விட்டது. '...யோவான் ... மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே' (அப்.19:4). ஆனால் புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானமோ அடக்கம் என்பது மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கும் அவசியமானது. சீஷர்களுக்கு எபேசுவில் ஞானஸ்நானம் கொடுக்கத் தீர்மானிக்குமுன் பவுல் எபேசுவிலுள்ள விசுவாசிகளைப் பார்த்து,

(i) 'நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?' என்று கேட்டார். அவர்கள் பரிசுத்த ஆவி உண்டென்பதைக் கேள்விப்படவில்லை என்று கண்டு,

(ii) 'அப்படியானால், நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள்?' என்ற இரண்டாம் கேள்வியைக் கேட்டார்.

இந்த இரண்டு கேள்விகளிலிருந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானம் ஒரு படி எனத் தெளிவாய் விளங்குகிறது. ஆகையினால் பரி. பவுல் ஞானஸ்நானக் கட்டளையின் வார்த்தைகளில் அல்ல. ஞானஸ்நானத்தின் நோக்கத்தையும் அதன் கருத்தையும் குறித்தே சிரத்தையுடையவராயிருந்தார் என்று எவரும் கண்டுகொள்ளலாம். இரண்டாவதாக, புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தின் நோக்கம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்காயிருப்பதால், இயேசு தொடக்கத்தில் கட்டளையிட்டபடி, ஞானஸ்நானக் கட்டளையில் 'பரிசுத்த ஆவியின் நாமத்தில்' என்ற வார்த்தைகளும் சேர்ந்திருக்க வேண்டும்.

2. கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒருவன் தான் இரட்சிக்கப்பட, கர்த்தராகிய இயேசுவை தன் வாயினாலே அறிக்கையிட்டு, 'தேவன்

அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று' தன் இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும் (ரோம. 10:9). இப்படிப்பட்ட ஒருவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறும்போது மத். 28:19-ல் உள்ள ஞானஸ்நானக் கட்டளை 'குமாரனின் நாமம்' இயேசுவையே குறிக்கிறது என்று அறிந்திருக்கிறான். அப்படியாயின் அவனுக்கு ஏன் மறுபடியும் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்? ஞானஸ்நானக் கட்டளையில் 'இயேசு' என்ற பதம் உபயோகிக்கப்படாதபடியால் அந்த ஞானஸ்நானத்துக்கு விலையில்லாமல் போய் விட்டதா? கொர்நேலியுவின் வீட்டார் (அப். 10:48) 'கர்த்தருடைய நாமத்தினாலே' ஞானஸ்நானம் பெற்றதாகச் சொல்லப்பட்டுள்ளது. 'குமாரன்' என்பது ஒரு பெயராய் இருக்க முடியாதென்றால், 'கர்த்தர்' என்பது ஒரு பெயராய் இருக்க முடியாது. குமாரன் என்பதும், கர்த்தர் என்பதும் இயேசுவையே குறிக்கின்றது என்பதையும் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருக்கிற அனைவரும் அறிவார்.

3. ஞானஸ்நானக் கட்டளையின் வார்த்தைகளைக் காட்டிலும், புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானத்தை விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாய் மாற்றிய ஆரோக்கியமான உபதேசங்களை அப்போஸ்தலர் அதிகமாய் முக்கியப்படுத்தினார்கள். இதை நாம் அப்போஸ்தலர் நடபடிகளில் தெளிவாய்க் காணலாம். ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாய்ச் சொல்லப்படும் ஏழு சம்பவங்களில் ஞானஸ்நானக் கட்டளையின் வார்த்தைகளைப் பற்றியே சொல்லப்படாவிட்டாலும் இந்த எல்லா சம்பவங்களிலும் கிறிஸ்து திட்டவட்டமாய்ப் பிரசங்கிக்கப்பட்டார் (அப். 8:35,36; 9:17,18; 10:47, 16:15; 16:32,33, 18:8; 22:16). இரண்டு சந்தர்ப்பங்களில் 'கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே' (அப் 8:15; 19:5) என்றும், ஒரு சந்தர்ப்பத்தில் 'கர்த்தருடைய நாமத்தினாலே' (அப்.10:48) என்றும், இன்னொரு சந்தர்ப்பத்தில் 'இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே' (அப். 2:38) என்றும் வாசிக்கிறோம்.

புதிய ஏற்பாடு முழுவதிலும் ஒரு இடத்திலாவது 'இயேசுவின்

நாமத்தில் மட்டும்' ஞானஸ்நானங் கொடுக்கப்பட்டது என்று கூறப்படாதது கவனிக்கப்படத்தக்கது.

## பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் நாம் ஏன் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்?

யோவானுடைய ஞானஸ்நானத்தைப் போலல்லாமல் புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானமானது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் என்றழைக்கப்படும் அனுபவத்தின் மூலமாக பிதாவையும் குமாரனையும் பரிசுத்த ஆவியையும் பெற்றுக் கொள்ள விசுவாசிகளின் இருதயங்களை ஆயத்தப்படுத்தும் ஒரு படியாயிருந்தது (அப். 2:38) பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து இயேசு கூறியபொழுது, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய மூவரும், இந்த அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டவர்களின் உள்ளே வந்து வாசம் பண்ணப் போவதாய் கூறினார். இவ்விஷயத்தைக் குறித்த அவருடைய வார்த்தைகளையே நாம் படிக்கலாம். 'நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்;' 'நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே (தேற்றரவாளன் வாசம் பண்ணும் படியாய் வரும் அந்த நாளிலே) நீங்கள் அறிவீர்கள்' (யோவா. 14:16,20). 'நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்' (யோவா. 14:23) என்று மேலும் கூறுகிறார்.

இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது பிதாவின் பிரசன்னத்தையும் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தையும் நாம் காண்கிறோம். 'இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்' என்று சொல்லி இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின் போது பிதா சாட்சி கொடுத்தார். அவ்வேளையில், பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல அவர் மேல் வந்திறங்கினார் (மத். 3:16,17).

ஆகையினாலே புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானமானது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் கொடுக்கப்பட வேண்டியதாயிருக்கிறது.

## இயேசுவின் நாமத்திலேயே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று சிலர் வற்புறுத்துவதேன்?

'இயேசு மாத்திரம்' என்னும் உபதேசத்திலடங்கிய தந்திரத்தை நாம் கண்டு கொள்வது அவசியம். 'இயேசுவின் நாமத்தில் மாத்திரம்' ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துவதின் மூலமாய் துர் உபதேசப் பகுதிக்குள் நுழைந்து படிப்படியாய் திரித்துவத்தை மறுதலிக்கிறார்கள். இயேசுவை பிதா என்றும் குமாரன் என்றும் பரிசுத்த ஆவி என்றும், அவர்கள் மூவராயிராமல் ஒரே ஒரு ஆள் என்றும் சொல்லக்கூடிய அளவுக்கு அவர்களில் சிலர் துணிந்து விட்டார்கள். 'கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்' (11 யோவா. 9-11). 'பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து' (1யோவா. 2:22) என்று மேலும் கூறுகிறார்.

## 'திரித்துவம்' என்னும் வார்த்தை வேதத்திலுள்ளதா?

திரித்துவம் (Trinity) என்ற பதத்தை வேதம் முழுவதிலும் ஒருவன் தேடினாலும், ''திடீரென எடுத்துக்கொள்ளப்படுதல்'' (Rapture) என்னும் பதத்தை வேதத்தில் தேடிப்பார்ப்பதைப் போன்ற ஒரு வீணான முயற்சியாயிருக்கும். ஏனெனில் அவ்வார்த்தை அதில் இல்லை. ஆனால், தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் தனித்தனியான மூன்று ஆள் தத்துவங்களாயிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாய் வெளிப்படுத்தும் எண்ணற்ற வசன

அத்தாட்சிகள் வேதத்தில் உண்டு. அவ்வித தெளிவான வசனங்கள் சிலவற்றைக் கீழே தருகிறோம்.

'ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நான பெற்று, ஜெபம்பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப் போல அவர் மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தமும் உண்டாகி; நீர் என்னுடைய நேசகுமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது' (லூக். 3:21,22). ஒருவன் பூமியிலே கிறிஸ்துவின் பிரசன்னத்தையும் பரலோகத்தில் தன் குமாரனைப்பற்றி சாட்சியிடும் பிதாவின் பிரசன்னத்தையும், பரலோகத்திலிருந்து இறங்கிய பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தையும் தனித்தனியாகப் பார்க்கலாம். அவர்கள் மூன்று வித்தியாசமான இடங்களில் மூன்று ஆட்களாய்க் காணப்படுகிறார்கள்.

'நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது... வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்' (யோவா. 14:16).

'நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்' (யோவா. 16:7)

மேற்சொல்லிய இரண்டு வசனங்களில் பின்வரும் காரியங்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

1. இயேசு பிதாவை வேண்டிக்கொள்ளுகிறார்.

2. பிதா அந்த ஜெபத்துக்குப் பதில் கொடுக்கிறார்.

3. பரிசுத்த ஆவி 'வேறொரு தேற்றரவாளன்' என்றழைக்கப்படுவதினால், ஒரு (முதல்) தேற்றரவாளன் இயேசு என்று வெளியாகிறது.

4. கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியும் இடமாற்றம் செய்து கொள்ளுகிறார்கள். பரிசுத்த ஆவியைக் கீழே அனுப்பும்படியாய்ப் பரத்திலுள்ள பிதாவினிடத்திற்குக் கிறிஸ்து போகிறார்.

இயேசு வார்த்தைகளிலே ஜாலம் பண்ணுகிறாரா? 'நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்' என்று சொன்ன பின் தானே மூன்று ஆள்தத்துவங்களாய் இருந்து கொண்டு தேவத்துவத்தில் மூன்று ஆள்தத்துவங்கள் இருப்பதாய்ச் சொல்லி தம் சீஷரை ஏமாற்றினாரா?

சபை சரித்திரமும், பல சரித்திர ஆசிரியர்களும் கூறுவதை நாம் கவனிப்போம்.

## சபை சரித்திரம்

ஆதி சபையானது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலேயே ஞானஸ்நானம் கொடுத்ததென்று காண்பிக்க சபை சரித்திரத்திலிருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறோம்.

## ஜஸ்டின் மார்டையர் (Justin Martyr) (2-ம் நூற்றாண்டு)

'நாங்கள் அவர்களுக்குப் போதித்தவை சத்தியத்திற் கொத்ததாய் உள்ளன என்ற முழு நிச்சயமுள்ளவர்களையும், கிறிஸ்தவ ஜீவியத்திற்கென்று தங்களைத் தத்தம் செய்தவர்களையும் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் தேவனைத் தேடவும் அவர்கள் செய்த பாவங்களுக்கு மன்னிப்பைத் தேடவும் அழைக்கிறோம். நாங்களும் அவர்களோடு சேர்ந்து உபவாசித்து ஜெபிக்கிறோம். பின்பு தண்ணீருள்ள இடத்திற்கு அவர்களை அழைத்துச் செல்கிறோம். அங்கே நாங்கள் பெற்றது போலவே அவர்களும் தங்கள் மறுஜென்மத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் அங்கே உண்டாயிருக்கிற சகல வஸ்துக்களின் பிதாவும், சர்வ வல்லவருமாகிய பிதாவாகிய தேவனின் நாமத்திலும், பரிசுத்த ஆவியின் நாமத்திலும் தண்ணீரில் அமிழ்த்தப்படுகிறார்கள்.

**வாடிங்டன் (Waddington) :**

'ஞானஸ்நானம் கொடுக்கும் மிகப் பழைய முறையான முழுக்குகிற ஆராதனையானது திரித்துவத்தின் மூன்று ஆட்களின் நாமத்திலே கொடுக்கப்பட்டது'.

**இ.டியி.பிரசன்ஸ் (E.de. Presence) :**

'பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் முழுக்குதலும், ஆசீர்வதிப்பதும் இந்தக் காலத்தில் (முதல் இரண்டு நூற்றாண்டு காலத்தில்) ஞானஸ்நானம் கொடுக்கப்படும் ஒரே முறைமையாகும். இன்னும் அதன் புராதன முறைமை இருந்து வருகிறது.'

**மத்தேயு ஹென்றியின் அகராதி (Mathew Henry) :**

இந்த ஞானஸ்நானமானது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலேயே கொடுக்கப்பட வேண்டும். (1) அதாவது, மனுஷனாலல்ல, பரத்தின் அதிகாரத்தினால் - ஏனென்றால் அவருடைய ஊழியக்காரர் தேவத்துவத்திலுள்ள மூவரின் அதிகாரத்தினாலேயே கிரியை செய்கிறார்கள். (2) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தின் மேல் எல்லாமே, விசேஷமாக தண்ணீர் ஞானஸ்நானமானது ஜெபத்தினால் பரிசுத்தமாக்கப்படுகிறது. ஆனால், (3) இது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்துக்குள்ளாக்கும்படி கொடுக்கப்படுகிறது. இது கிறிஸ்தவ மார்க்கத்தின் மூல உபதேசங்கள் தொகுப்பாயிருக்கும்படி விரும்பப்பட்டது. நாம் ஞானஸ்நானம் பண்ணப்படும் போது,

(1) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய தேவனைப் பற்றியவேதத்தின் வெளிப்படுத்தலை நாம் அடைவதையும்,

(2) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய தேவனோடு செய்யும் உடன்படிக்கையின் ஒப்புக்கொள்ளுதலையும் பக்தியோடு அறிக்கையிடுகிறோம். - மத்தேயு 28:19 பற்றிய விளக்கவுரை

# அதிகாரம்

# 7

# ஞானஸ்நானத்தில் உள்ள வல்லமை

'கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; (ஏனெனில்) இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது' (ரோம. 1:16) என்று பரி. பவுல் கூறுகிறார். மனுஷர் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிப்பது (2 தீமோ. 3:5) கடைசிக் கால அடையாளங்களில் ஒன்றாகும். சதுசேயர் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுவதாக இயேசு குறிப்பிட்டார் (மத்.22:29).

நாம் ஞானஸ்நானம் பெற்றபோது, நமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்திருக்கலாம் (ரோம.6:17). எனினும் நாம் நீதியின் வசனத்தில் அனுதினமும் பழகுவதின் மூலம் (எபி.5:13) இந்த உபதேசத்திலுள்ள வல்லமையைக் கண்டுணர்வது மிகவும் அவசியம்.

பாவிகளும், ஞானஸ்நானம் பெறாதவர்களும் பாவசரீரம் (ரோம.6:6) என அழைக்கப்படும் ஒரு சரீரத்தையே உடையவர்களாக இருக்கின்றனர். பரி, பவுல் சரீரத்தை ஒரு 'மரண சரீரம்' என்று அழைக்கிறார் (ரோம்.7:24). இப்படிப்பட்ட ஒரு சரீரத்தின் அவயவங்களில் பாவ இச்சையானது, ஒரு பிரமாணத்தைப் போன்று கிரியை செய்கிறது (ரோம. 7:5). , அது தேவனுடைய பிரமாணத்திற்கு விரோதமாகப் போராடி, பாவம், மரணம் ஆகியவற்றின் பிரமாணத்திற்கு மனிதனைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது (ரோம.7:22,23). அப்படிப்பட்ட ஒரு மனிதன் தனது சரீரத்தையும் அதின் அவயங்களையும் அசுத்தத்திற்கும், துர்க்கிரியைகளுக்கும் ஒப்புவித்து, பாவத்திற்கு ஊழியம் செய்து, மரணத்திற்கேதுவான கனிகளைக் கொடுக்கிறான். இத்துர்க்கிரியைகளின் மூலம் அவன் தனது மனதிலே தேவனுக்குச் சத்துருவாக மாறிவிடுகிறான் (கொலோ. 1:21), இத்தகைய ஒரு பாவி உண்மையான மனந்திரும்பி, தனது பாவங்களைத் தேவனிடம் அறிக்கையிடும் போது, அவனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, கழுவப்படுகின்றன. ஒரு காலத்தில் தனது மனதும் மாம்சமும் விரும்பினவற்றையெல்லாம் தனது சரீரத்தில் நிறைவேற்றிக் கொண்டிருந்த அவனது பழைய மனுஷன் இப்போது கிறிஸ்துவுடனே சிலுவையிலறையப்பட்டு இருக்கிறான்.

கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தில் அவரோடு கூட அடக்கம் பண்ணப்படுவதின் மூலம், நாம் பாவத்திற்கு (பாவ சுபாவத்திற்கு) மரித்து, அதன் வல்லமையிலிருந்து விடுவிக்கப்படுகிறோம்

601-(GG/2) S/R

(ரோம.6:2,3,7). அதற்குப்பின் நாம் நம்மைப்பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக்கொண்டிருக்கும் காலம் வரை, இச்சுபாவமானது நமது மாம்சத்தில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதாகவே இருக்கும் (ரோம். 6:11; 8:3). இவ்வாறு நாம் ஒரு பக்கத்தில் கிறிஸ்துவோடுகூட மரித்தவர்களாக இருக்கும்போதே, மறுபக்கத்தில், ஒரு புதிய சித்தத்தையும், புதிய சரீரத்தையும் உடையவர்களாக, அவருக்குள் நீதிக்கென்று பிழைத்திருப்போம். 'ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்;.. இதோ வருகிறேன்' (எபி. 10:5,7) என்று இயேசு கூறினார்.

இப்படிப்பட்ட ஒரு சரீரத்தில், மீண்டும் நாம் நமது அவயங்களை அநீதிக்கு ஒப்புவிக்கவோ, இப்பிரபஞ்சத்தின் வேஷத்தைத் தரிக்கவோ முற்படலாகாது. அதற்குப் பதிலாக நாம் நமது சரீரத்தை ஒவ்வொரு நாளும் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். அப்போது தேவனுடைய வசனத்தின் மூலம், அவரது பரிபூரண சித்தத்தை நாம் அறிந்து கொள்ளத்தக்கதாக அவர் நமது மனதைப் பதிதாக்குவார். நாம் மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக, நமது அவயங்களை, நீதிக்குரிய ஆயுதங்களாகப் பரிசுத்தாவியானவருக்குத் தொடர்ந்து ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோம். 6:13). நாம் இதனை நடைமுறையில் பயிற்சிக்கும் போது, பழைய மனுஷனுக்கும் பாவசரீரத்திற்கும் சொந்தமானவை அனைத்தும் நம்மை விட்டு ஒழிந்துபோகும்படி நாம் எவ்வாறு கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோமோ (மூழ்கி விடுகிறோமோ), அவ்வாறே அனைத்தும் புதியதாகும் படியும், நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகும் படிக்கும், பரிசுத்த ஆவிக்குள் அபிஷேகம் பண்ணப்படவும் (மூழ்கி விடவும்) முடியும் (2கொரி. 5:17). அப்போது பாவம், வியாதி, மரணம், பிசாசு ஆகியவற்றை நாம் எதிர்த்து தொடர்ந்து போராடத்தக்கதாக, உயிர்த்தெழுதலின் வல்லமையினால் நிறைந்த போராயுதங்களாக, நமது சரீரத்தின் அவயங்களைத் தேவன் புதியதாகச் சிருஷ்டிக்கிறார். இவ்விதமாகத் தான் '... ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். ... என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்' (1 கொரி. 9:26,27) என்று பவுலால் கூற முடிந்தது.

ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்பட்டான் (2 தீமோ. 2:5). எனவே நாம் தேவபக்தியின் பயிற்சியில் தொடர்ந்து பழகி, மகிமையின் மேல் மகிமையடைந்து, ஜெயத்தின் மேல் ஜெயம் பெற்று, பூரணத்தை நோக்கிக் கடந்து செல்வோமாக.

**Rejoy**
PUBLICATION

SIVAKASI
**Bethesda**
WORSHIP CHURCH

9/536A-4, Bethesda Nagar Reserve Line , Sivakasi.
Ph : 98423 95975, 94435 73691, 94435 73698.
email : j.titusking@gmail.com Follow us : sivakasibethesda